DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளக்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524

PYRAMID GROUP
வீடு வாங்க விற்க!
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555

FIRST MORTGAGE
SECOND MORTGAGE
REFINANCE
SUJAN SIVARAJAH 416.302.5555

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran Tax Consultant
Tel: 647-344-6600

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரம் ஒருமுறை இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canadian Media Circulation Audit
$1.00 416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1579 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 10, 2026

## தமிழரின் நகைகளை கொள்ளையடித்த ராஜபக்ச ''திருடர்களிடமிருந்து'' அவற்றை மீட்டுத் தாருங்கள் என அநுர அரசிடம் சிறீதரன் எம்.பி வலியுறுத்து



இறுதி யுத்தத்தின் போது தமிழர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் சொத்துக்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து அரசு வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் 9ம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற பணத்தூய்மைப்படுத்தல் மற்றும் நிதிசார் சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,


”தமிழீழ வைப்பகத்தில் தமிழ் மக்கள் அடகு வைத்திருந்த பல கோடி ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை, இறுதி யுத்தத்தின் போது ராஜபக‘ என்னும் கொள்ளையர்களின் அரசே கொள்கலன்களில் ஏற்றிச் சென்றதாக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்‘ல் சரத் பொன்சேகா ஏற்கனவே பலமுறை சுட்டிக்காட்டியுள்ளார் (தொடர்ச்சி 6ம் பக்கம்)



## யூலை 12ம் திகதி நடைபெறவுள்ள ‘BECOMING’ – A JOURNEY TO WHOLENESS என்னும் நிதி சேர் நாட்டிய நிகழ்ச்சி!

எதிர்வரும் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை “சக்தி நர்த்தனாலயம்” நடனப் பள்ளி வழங்கும் **‘BECOMING’- A JOURNEY TO WHOLENESS** என்னும் நிதி சேர் நாட்டிய நிகழ்ச்சியில் தனியான தனது நாட்டியத்தை வழங்கவுள்ளார் நடனப் பள்ளியின் சிரேஸ்ட மாணவி மிசேல் நிரூஷியா கொட்வின் அவர்கள். நோர்த் யோர்க் நகரில் உள்ள **YORKWOOD LIBRARY THEATRE** மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நாட்டிய நிகழ்ச்சியின் மூலம் சேகரிக்கப்படுகின்ற நிதியானது என்னும் மூளை காயங்களுக்குள்ளான நோயாளர்களின் நலனுக்காக சேவையாற்றும் **Brain Injury Association of York Region** என்னும் அமைப்பிடம் கையளிக்கப்படும்.






COMMERCIAL REAL ESTATE
BUY · SELL · LEASE
Sri Nada Rajasundram Real Estate Broker
416-276-6666
RE/MAX ACE
Let's Talk Strategy.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East, Mississauga, ON. L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

தமிழில் உரையாடி உங்கள் நெருக்கடியான நேரத்தில் எமது சேவைகளை பூரண திருப்தியுடன் பெற்றுக்கொள்ளுங்கள்
SMART RESTORATION
ARUN ANANTH
647-849-4444 (Cell)
1-833-SMART 09 (Office) (76278)

G.Rajah
முள்ளிவாய்க்காலில் இருந்து...
NAM THAYAGAM
நம் தாயகம் INC
Nam Thayagam Inc.
3031, Markham Road, Unit #35, Scarbrough, ON M1X 1L9
namthyakam@gmail.com
416 558 2111


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

## உதயன் கதிரோட்டம்

# தாயக "தமிழர் அரசியல் தளத்தில்" நிற்கும் அனைவருமே சந்தர்ப்பவாதிகளாக தங்கள் இருப்பைத் தொடர்வதால் மக்கள் ஏமாற்றப்படுகின்றார்களா?

எமது தாயக மண்ணில் தங்களை அரசியல் தளத்தில் தொடர்ச்சியாக தக்க வைத்துக் கொண்டும் தங்களை தொடர்ந்து தக்க வைக்க முயலும் ஏனைய "புறக்கணிக்கப்பட்ட" அரசியல்வாதிகளும், பாராளுமன்ற கதிரைகளை அலங்கரிக்கும் சம்பளம் பெறும் அரசியல்வாதிகளுமாக அனைவரையும் சேர்த்துப் பார்க்கும் போது அனைவருமே "குட்டையில் ஊறிய மட்டைகளாகவே" வலம் வருகின்றார்கள் என்பதை வாழ்க்கையை சிரமங்களுடன் நகர்த்திச் செல்லும் பொதுமக்கள் கூட நன்கு புரிந்து வைத்துள்ளார்கள். ஆனால் வாழ்க்கையை நகர்த்திச் செல்வதற்கும் தங்கள் குடும்பங்களைக் கவனிக்கவும் போதிய பொருளாதார வளங்கள் அற்றவர்களாக வாழும் அவர்கள் "மௌனமாகவே" இருந்து விடுகின்றார்கள்.

குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்களாக தற்போது பதவிகளை வகிக்கும் அனைவருக்கும் சலுகைகள் மற்றும் பொருளாதார வளங்கள் தொடர்ச்சியாகவே கிடைக்கின்றன. மக்களால் புறக்கணிக்கப்பட்டவராக தமிழ் மக்கள் மத்தியில் வரமுடியாதவர்களாக உள்ள பலர் தங்கள் முயற்சியை இன்னும் கை-விடுவதாக இல்லை பாராளுமன்ற பதவிகளை இழந்தாலும் மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் அதில் போட்டியிட்டு குடும்ப அரசியலை தொடரும் நப்பாசையில் சுரேஸ் பிரேமச் சந்திரன் போன்றவர்கள் "மூழ்கி" உள்ளார்கள். மறுபக்கத்தில். கட்சியினால் ஒதுக்கப்பட்டவராகவும் அடையாளம் காணப்பட்டுள்ள செல்வம் அடைக்கலநாதன் தனது எம். பி பதவி மூலம் தன்னை தக்கவைக்கப் பார்க்கின்றார். அண்மையில் பதவிக் காலம் முடிந்து தனது நாட்டுக்குச் செல்லும் சுவிற்சலாந்து தேசத்தின் இலங்கைத் தூதுவரை தனது சகாக்கள் இருவரோடு சென்று அவர் சந்திக்கின்றார். ஆனால் தமிழீழ விடுதலை இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களோடு இயக்கத்திற்கும் சமூகத்திற்கும் இனத்திற்கும் விசுவாகமாக இருந்து தொடர்ந்து செல்வம் அடைக்கலநாதனை கட்சியிலிருந்து வெளியேற்ற முனைந்தும் அவர்களால் இயலாமல் இருக்கின்றது. பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகிய செல்வம் அடைக்கலாதன் தமிழர்களை பிரதிநித்துவம் செய்யத் தகுதியானவரா என்பதை மக்களும் தமிழீழ விடுதலை இயக்கமும் விரைவில் தீர்மானிக்க வேண்டும்.

அடுத்ததாக நாம் இங்கு குறிப்பிடவுள்ள விடயமானது தமிழ்நாட்டுக்குச் செல்வதில் "நான் முந்தி நீ முந்தி" என்ற முனைப்போடு செயற்படுகின்ற தனிநபர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் சார்ந்தவர்களின் அவர்களது தமிழகப் படையெடுப்பு. "தமிழ்த் தேசியப் பேரவை" என்னும் ஒரு "அரசியல் கூட்டு" பிரநிதிகள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தமிழகம் சென்று தற்போதைய முதலமைச்சர் விஜேய் அவர்களை முதலில் சந்தித்தார்கள். அவசரப்பட்டும் தீவிர அவாவுடனும் நாம் முன்னர் குறிப்பிட்ட "நான் முந்தி நீ முந்தி" என்ற அடைமொழியோடு சென்று அவர்கள் முதலமைச்சர் விஜேயுடன் உரையாடியவை மற்றும் அவரிடம் கையளித்த மகஜர் போன்றவற்றில் ஏதாவது புதிதாக இருந்தனவா அல்லது விஜேய் அவர்களால் நிறைவேற்றக் கூடிய ஏதாவது உள்ளதா என்று பலரும் அறிய விரும்புவார்கள்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக இவ்வார இதழின் உட்பக்கத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதும் கட்டுரையில் சற்று விளக்கமாகவும் துணிச்சலுடனும் நேர்மைத் தன்மையுடன் சில கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார். விஜேய் தமிழ்நாட்டுத் தேர்தலில் போட்டியிட்டபோது இந்த குழுவில் சென்றுள்ளவர்கள் அவரைப் பற்றி என்ன விமர்சனம் செய்தார்கள்? விஜயின் ரசிகர்கள் பற்றி தரக்குறைவாக விமர்சனங்களை வைத்தார்கள் என்பதையெல்லாம் நிலாந்தன் விளக்கமாக எழுதியுள்ளார்.

அதேவேளை தமிழக அரசின் முன்னாள் முதல்வர் ஸ்டாலினை அவரது ஆட்சிக் காலத்தில் சென்று சந்தித்தவர்கள் அவரிடம் தெரிவித்த கருத்துக்களையே இம்முறை விஜேய் அவர்களோடு பகிர்ந்து கொண்டுள்ளார்கள். முன்னர் ரணில் விக்கிரமசிங்க பற்றி தெரிவித்த அதே கருத்துக்களையே தற்போதும் விஜேய் அவர்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்கள். இவையெல்லாம் தங்கள்பற்றி எமது தாயக தமிழ் மக்கள் உயர்வாகக் கருதி எதிர்வருகின்ற தேர்தல்களில் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு சென்றிருந்தால் இது ஏற்புடையது அல்ல என்பதையும் அவ்வாறான மனநிலை மக்களிடம் இல்லை என்பதையும் நாம் இங்கு கூறிவைக்கின்றோம்.

அண்மையில் கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்கள் இலங்கை ஜனாதிபதி அநுரவுடன் உரையாடிய போது "தமிழ் அரசியல் கைதிகளை நீங்கள் விடுதலை செய்ய வேண்டும்" என்று கேட்டபோது அநுர அவரிடம் "நீங்கள் ரணில் மற்றும் மகிந்தா. போன்றவர்களோடு "உறவாடிக் கொண்டிருந்த" போதுஅதைச் செய்திருக்கலாமே? என்று சாணக்கியனை மடக்கினாராம்.

இவ்வாறுதான எமது தாயகத்தின் தமிழருக்கான அரசியல் என்று நம்பப்படும் தளத்தில் உள்ளவர்கள் எவருமே நம்பிக்கைக்குரியவர்களாக இல்லை. எனினும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களுக்கு ஒரு "இடத்தை" எமது மக்கள் வழங்கினாலும் அவரோடு "கிட்ட" இருப்பவர்கள் போதிய அனுபவம் இல்லாதவர்களாக உள்ளதும் மக்களுக்கு அதிருப்த்தி தரும் செய்தியாகவே இருக்கும் என்பதே யதார்த்தம்!

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 | Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 • Cell: 416 732 1608

4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2

website: www.uthayannews.ca • email: Uthayannews@yahoo.com




**அமெரிக்காவில் உணவகம் ஒன்றில் வேலை வாய்ப்பு**



Chef-Cook (சமையல் வல்லுனர் மற்றும் உதவியாளர்கள்)

அமெரிக்காவில் உள்ள உயர்தர உணவகம் ஒன்றிக்கும் அனுபவமுள்ள Chef-Cook (சமையல் வல்லுனர் மற்றும் உதவியாளர்கள்) ஆகியோர் தேவை.

விண்ணப்பதாரர்கள் கனடிய குடியுரிமை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

அத்துடன் தமிழ்-மலையாளம் - ஹிந்தி - தெலுங்கு - ஆங்கிலம் பேசத்தெரிந்தவர்களாக இருந்தால் முன்னுரிமை அளிக்கப்படும். தென்னிந்திய மற்றும் மேற்கிந்திய உணவுகள் தயாரிப்பதில் அனுபவம் கொண்டிருக்க வேண்டும்.

WhatsApp Text Messages மூலம் தயவு செய்து விண்ணப்பங்களை அனுப்பவும். அதில் கீழ்க் கண்ட விபரங்களையும் இணைக்கவும்: விண்ணப்பதாரியின் வயது, திருமண நிலை, மற்றும் தொலைபேசி எண்.

**விண்ண்ப்பம் அனுப்பவேண்டிய எண்: (937) 475-5992**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணம் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலய விமான தாக்குதலின் 31ஆம் ஆண்டு நினைவேந்தல் அதே தேவாலயத்தில் 9ம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது

யாழ்ப்பாணம் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 31ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் 9ம் திகதி வியாழகக்கிழமை அன்றைய தினம் மாலை சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நடைபெற்றது.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றது. அதனை தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் மலர் தூபி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

கடந்த 1995 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 09 திகதியன்று



நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப்படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 147 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.



அன்று அதிகாலை வலிகாமம் பிர தேசங்களை நோக்கி எறிகணை தாக்குதல், விமான தாக்குதல்களின் உதவியுடன் இராணுவத்தினர் முன்னேறிப்பாய்தல் (Leap forward) எனும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தொடர் எறிகணை தாக்குதல்களால் தமது வாழ்விடங்களை விட்டு நவாலியை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் நவாலி சென்ற் பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் தஞ்சமடைந்தனர்.

அன்றைய காலை திடீரென வந்த மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை மக்கள் தஞ்சமடைந்திருந்த தேவாலயம் மற்றும் ஆலயம் மீது வீசின.

இக் குண்டு வீச்சு சம்பவத்தில் குழந்தைகள் பெண்கள் உட்பட 147 பேர் அந்த இடத்திலேயே உடல் சிதறி பலியாகியிருந்தனர். 350க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.

# மன்னாரில் பெண்கள் பாடசாலை ஒன்றின் 5 ஆம் வகுப்பு மாணவியை அவரது ஆசிரியை கொடூரமாக அறைந்த நிலையில் சிறுமி வைத்தியசாலையில் அனுமதி!




(09-07-2026)

மன்னாரில் உள்ள பிரபல பெண்கள் பாடசாலை ஒன்றில் தரம் 5 இல் கல்வி கற்கும் சிறுமி ஒருவர், வகுப்பாசிரியரால் கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவம், அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான விசேட வகுப்பொன்று இடம்பெற்றுக் கொண்டிருந்த போது, வகுப்பாசிரியர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு சிறுமி தவறான பதிலளித்ததாக கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைந்த வகுப்பாசிரியர், சக மாணவர்கள் முன்னிலையில் சிறுமியின் கன்னத்தில் பலமாக பல தடவைகள் அறைந்துள்ளார்.

ஆசிரியரின் இந்தத் தாக்குதலால், சிறுமியின் கன்னத்தில் காயங்கள் ஏற்பட்டு, இரத்த கண்டல்கள் காணப்பட்ட நிலையில் உடனடியாக பெற்றோர்களால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தற்போது சிறுமி வைத்தியசாலையில் தொடர் சிகிச்சை பெற்று வருவதாகவும், அவரது உடல்நிலை குறித்து அவதானிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் அதிர்ச்சியில் உள்ளனர். சிறுமியைத் தாக்கிய ஆசிரியை மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி, இது தொடர்பாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# இலங்கைப் பொலிஸாரின் அதிரடி வேட்டையில் 22 முக்கிய குற்றவாளிகள் உட்பட 619 பேர் கைது!



பொலிஸ்மா அதிபரின் நேரடி அறிவுறுத்தலுக்கு அமைய, நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட குற்றத்தடுப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்புச் சோதனை நடவடிக்கைகளில், பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 22 முக்கிய சந்தேகநபர்கள் உட்பட 619 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், அனைத்துப் பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கிய வகையில் வலய மட்டத்திலான இந்த விசேட சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய, 8ம் திகதி புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட இந்த விசேட நடவடிக்கையின் போது, 27 ஆயிரத்து 198 நபர்கள் பொலிஸாரால் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன்போது குற்றச்செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 22 முக்கிய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 166 நபர்களும், நாள் குறிப்பிட்டு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 246 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய 112 சாரதிகளும் மற்றும் ஆபத்தான முறையில் கவனயீனமாக வாகனம் செலுத்திய 127 சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபட்ட 4 ஆயிரத்து 454 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அமைதியைப் பேணவும், குற்றச் செயல்களை முளையிலேயே கிள்ளியெறியவும் இவ்வாறான விசேட சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு துரித நீதி வேண்டும் என்ற 40 ஆயிரம் கையெழுத்துகள் அடங்கிய மனு எதிர்க்கட்சித் தலைவரிடம் கையளிப்பு



தீர்க்கப்படாத சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளுக்குத் துரித நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, துஷ் விக்கிரமநாயக்க தலைமையிலான குழுவினர் திரட்டிய 40 ஆயிரம் கையெழுத்துகள் அடங்கிய மனு 9ம் திகதி அன்று வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விடம் கையளிக்கப்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த மனுவைப் பெற்றுக்கொண்டனர்.

இந்த மனுவில், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹிணி கவிரத்ன, சமிந்தரானி கிரியெல்ல உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல நாடா ளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் கையெழுத்திட்டனர்.

இதற்கு முன்னதாக, துஷ் விக்கிரமநாயக்க தலைமையிலான குழுவினர், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்து, இந்த விடயத்தின் முக்கியத்துவம் மற்றும் நிலுவையில் உள்ள முறைப்பாடுகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அராலி கடலில் இருந்து மீனவரான குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!



அராலி மேற்கு கடலில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரது சடலமானது மீட்கப்பட்டுள்ளது. அராலி மத்தி, வட்டுக்கோட்டையை சேர்ந்த செல்லையா சிவகுமார் (வயது 49) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் 9ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் கடற்றொழிலுக்கு சென்றுள்ளார். அதன்பின்னர் அன்று மதியம் 12.40 மணியளவில் அவர் கடலில் சடலமாக மிதப்பதை வேறு மீனவர்கள் அவதானித்தனர்.

பின்னர் இது குறித்து உறவினர்களுக்கும், வட்டுக்கோட்டை பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவுள்ளனர்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

கனடிய செய்திகள் Canadian News

# கனடா, பீல் பிரதேசத்தில் வெற்றிகரமாக இயங்கிவரும் சொப்கா குடும்ப மன்றத்தின் 17வது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது

**- சுலோச்சனா அருண்**

கனடா, ஒன்ராரியோவில் உள்ள பீல் பிரதேசத்தில் கடந்த 17 வருடங்களாகச் செயற்பட்டுவரும் தமிழ் மக்களின் குடும்ப மன்றமான சொப்கா (SOPCA) குடும்ப மன்றத்தின் 17வது ஆண்டு நிறைவு கலை விழா ஜோன் போலிஸ் ஒன்றுகூடல் மண்டபத்தில் சென்ற சனிக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு "ஒன்ராறியோ கிராமத்து வதனம் பெண்கள் அமைப்பி" நிறுவுனரும், ஆசிரியையுமான கமலவதனா சுந்தா அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக 7 ஆம் வட்டார கவுன்சிலரும், மேயர் பதவிக்குப் போட்டியிடுபவருமான தீபிகா தமெர்லா அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மங்கள விளக்கேற்றியபின் தமிழ்த்தாய் வாழ்த்து, கனடிய தேசியப்பண் ஆகியவற்றைத் தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றது. தொடர்ந்து வரவேற்பு உரையும், வரவேற்பு நடனமும் இடம் பெற்றன. தொடர்ந்து இளைய தலைமுறையினரின் கண்ணன், ராதா நடனம், சிறுவர்களின் நடனம், மயில் நடனம், நாட்டிய நடனம், உயர் வகுப்பு மாணவர்களின் நடனம் போன்ற நடன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. "எது சிறந்த தொழில்", "இருக்கும் போதே கவனி" போன்ற சமூக நாடகங்களும் இடம் பெற்றன.

கல்வி மேற்படிப்புக்கான உதவித்திட்டப் பரிசுகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்தப் பரிசுகளை அபர்ணா உதயகுமார், கிரித்திகா சாந்தகுமார், கயூரி வேல்நாதன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். அடுத்து மன்றத்தின் முதியோர் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து நந்தா உணவகத்தின் சேவையைப் பாராட்டி விருது கொடுத்து அவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அடுத்து வீணை இசை இடம் பெற்றது. தொடர்ந்து செல்வி அபிசா, பிரவீன், சபரீசன், செல்வி திரிஸா, செல்வி கேதாயினி ஆகியோரது பாடல்கள் இடம் பெற்றன.

தலைவர் திருமதி. யாழினி விஜயகுரின் உரையைத் தொடர்ந்து, செல்வி ஜெனிசா ராசேந்திரபிரசாத், திரு. ஈசா பரா ஈசானந்தா, பேராசிரியர் திரு. கிருபராஜன் தியாகலிங்கம், முன்னாள் தலைவரும் எழுத்தாளருமான குரு அரவிந்தன், ஆகியேரது உரைகள் இடம் பெற்றன. தலைவர் யாழினி விஜயகுமார் மற்றும் முன்னாள் தலைவர் குரு அரவிந்தன் ஆகியோர் செப்கா மன்றத்தின் கடந்தகால வளர்ச்சி பற்றியும், இரத்தவங்கி, உணவு வங்கி போன்றவற்றுக்கு உதவிகள் செய்வது பற்றியும், இளையோருக்கான கல்வித்திட்டம், தன்னார்வத் தொண்டர்களுக்கான பயிற்சி, தன்னார்வத் தொண்டர்களாகப் பூங்காக்கள் துப்புரவு செய்வது பற்றியும், இனி வருங்காலங்களில் இளையோரின் எங்கள் சமூகத்திற்கான பொறுப்புகள் என்ன என்பது பற்றியும் தமது உரையில் குறிப்பிட்டனர்.

திருமதி. குலரஜனி குலசேகரத்தின் பிரதம விருந்தினர் அறிமுகத்தைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் கமலவதனா சுந்தா அவர்களின் உரை இடம் பெற்றது. அவர் தனது உரையில் இளைய தலைமுறையினருக்கு இந்த மண்ணில் சிறந்த எதிர்காலம் காத்திருக்கிறது என்பதையும், அதை நேரம் கிடைக்கும் போது கவனமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதையும் வலியுறுத்தித் தனது உரையையாற்றினார். தொடந்து மன்றத்தின் செயலாளர் செல்வி தக்சாயினியின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி சிறப்பாக நிறைவுற்றது.











இலங்கை செய்திகள் Sri Lanka News

# நீர்கொழும்பு சிறை வன்முறையின் எதிரொலியாக யாழ்ப்பாணம் சிறைக்கு 60 கைதிகள் மாற்றம்!



நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட கொடூர வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து, அங்கிருந்த கைதிகளில் 60 பேர் பலத்த பாதுகாப்புடன் 7ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இரு தினங்களாகக் கைதிகளுக்கு இடையில் இடம்பெற்ற பயங்கர மோதல்களில், சிறைக் காவலர்கள் உட்பட 27 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இந்தத் துரதிர்ஷ்டவசமான கோரச் சம்பவத்தையடுத்து, நீர்கொழும்பு சிறைச்சாலை அமைந்துள்ள பகுதி முழுவதும் இன்னும் பதற்றம தணியாத சூழல் நிலவி வருகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில், அங்கு எஞ்சியிருக்கும் கைதிகளின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டும், சிறைச்சாலையின் நிலைமையை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கிலும், நீர்கொழும்பு சிறையிலுள்ள கைதிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள சிறைச்சாலைகளுக்குப் பிரித்து அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இந்த அவசர இடமாற்ற நடவடிக்கையின் அடிப்படையிலேயே, ஆயுதம் தாங்கிய அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புடன் முதற்கட்டமாக 60 கைதிகள் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ஏனைய கைதிகளையும் வெவ்வேறு தூர பிரதேச சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வேறு சிறைச்சாலைளுக்கு மாற்றப்பட்ட கைதிகள் மீது சிறைக் காவலர்கள் சித்திரவதை

## உடனடியாக நிறுத்தக் கோரி வலியுறுத்து




நீர்கொழும்பு சிறைச்சாலை வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து, அங்கிருந்து நாட்டின் ஏனைய சிறைச்சாலைகளுக்கு அவசரமாக மாற்றப்பட்ட கைதிகள் மீது நடத்தப்பட்டு வரும் கொடூரத் தாக்குதல்கள் மற்றும் சித்திரவதைகளைச் சிறைக் காவலர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கைதிகள் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு அவசரக் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் குழுவினால் விடுக்கப்பட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே இந்த அதிர்ச்சித் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: "நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து வெலிக்கடை சிறைச்சாலை உள்ளிட்ட நாட்டின் ஏனைய சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்ட கைதிகள், அங்குள்ள சிறை காவலர்களால் மிகக் கொடூரமான முறையில் தாக்கப்படுவதோடு, பல்வேறு சித்திரவதைகளுக்கும் ஆளாக்கப்பட்டு வருகின்றனர் என்று எமக்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

தடுப்புக்காவலில் உள்ள கைதிகளுக்கு எதிராக இவ்வாறான வன்முறைகளைப் பிரயோகிப்பது அவர்களின் அடிப்படை மனித உரிமைகளை முற்றாக மீறும் செயலாகும். எனவே, இந்த மனிதாபிமானமற்ற கொடூரத் தாக்குதல்களைச் காவலர்கள் எவ்வித தாமதமுமின்றி உடனடியாக நிறுத்த வேண்டும் என எமது குழு பலத்த அதிருப்தியை வெளியிடுவதுடன் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றது." - என்றுள்ளது.

கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும், இடமாற்றம் செய்யப்பட்ட கைதிகளைக் கையாளும் போது சர்வதேச மனித உரிமைத் தரநிலைகளைப் பின்பற்றி நடக்குமாறும் பொறுப்பு வாய்ந்த அனைத்து உயர் அதிகாரிகளுக்கும் கைதிகள் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு இந்த அறிக்கையின் ஊடாக அவசர அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட பயங்கர வன்முறை மற்றும் பதற்றமான சூழலைத் தொடர்ந்து, அங்குள்ள கைதிகளின் பாதுகாப்பு நிமித்தம் சுமார் 734 கைதிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள சிறைச்சாலைகளுக்கு அவசரமாகப் பிரித்து அனுப்பப் பட்டுள்ளனர் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நாடாளுமன்றத்தில் 7ம் திகதி அன்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழரின் நகைகளை கொள்ளையடித்த ராஜபக்ச "திருடர்களிடமிருந்து" அவற்றை மீட்டுத் தாருங்கள் என அநுர அரசிடம் சிறீதரன் எம்.பி வலியுறுத்து



ந.லோகதயாளன்.

இறுதி யுத்தத்தின் போது தமிழர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் சொத்துக்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து அரசு வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் 9ம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற பணத்தூய்மைப்படுத்தல் மற்றும் நிதிசார் சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"தமிழீழ வைப்பகத்தில் தமிழ் மக்கள் அடகு வைத்திருந்த பல கோடி ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை, இறுதி யுத்தத்தின் போது ராஜபக்ஷ என்னும் கொள்ளையர்களின் அரசே கொள்கலன்களில் ஏற்றிச் சென்றதாக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஏற்கனவே பலமுறை சுட்டிக்காட்டியுள்ளார். தான் அந்த நகைகளை அரசிடம் ஒப்படைத்ததாகவும், அவற்றுக்கு என்ன நடந்தது என்றும் அவர் கேள்வியெழுப்பியும் உள்ளார். கொள்ளையடிக்கப்பட்ட அந்த நகைகள் மற்றும் சொத்துக்கள், தூயதாக்கல் நடவடிக்கைகளுக்காக உகண்டா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் ராஜபக்ஷ குடும்பத்தினரால் முதலீடு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனது தொகுதியைச் சேர்ந்த 816 பேர், தமது நகைகளை மீட்டுத் தருமாறு என்னிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நகைகளை மக்களிடம் வழங்குவோம் என்று தேர்தல் வாக்குறுதி வழங்கிய அரசு, இப்போது அந்த நகைகளை அரசாங்க நிதிக்கு மாற்றப் போவதாகக் கூறுவது பாரிய ஏமாற்று வேலை." - என்றார்.

சுரேஷ் சலே முதல் கோட்டாய ராஜபக்ஷ வரை பல்வேறு விசாரணைகளை முன்னெடுக்கும் அரசு, இந்த நகை கொள்ளை குறித்து ஏன் விசாரணை நடத்துவதில்லை? இது தமிழர்களின் சொத்து என்பதால் அலட்சியமாக இருக்கிறீர்களா?" என்றும் சிறீதரன் எம்.பி. ஆவேசமாகக் கேள்வி எழுப்பினார்.

"பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்த நகைகளை மீள வழங்க அல்லது அவற்றின் பெறுமதியைக் கையளிக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மாவட்ட அரச அதிபர்கள் ஊடாக நகைகளை இழந்தவர்களின் பட்டியலைத் திரட்டி, ராஜபக்ஷ அரசு எவ்வளவு சொத்துக்களைக் கொள்ளையடித்தது என்பதை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்." - என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இதன்போது வலியுறுத்தினார்.

மேலும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் கொண்டுவரப்பட்ட நிதிகள் மற்றும் அரச வங்கிகளில் சட்டரீதியாக வைக்கப்பட்டிருந்த பணத்தையும் அரசுகள் பகற்கொள்ளையடித்துள்ளன என்று தெரிவித்த அவர், அந்த நிதியையும் மீள மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

# தண்ணீர் தரவில்லை என்றால் அமைச்சர்களை விடுவிப்போமென காங்கிரஸை எச்சரிக்க தமிழக வெற்றி கழக அரசு தயாரா? என எடப்பாடி பழனிசாமி கேள்வி

உலக செய்திகள் World News



தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய காவேரி தண்ணீரை தரவில்லை என்றால், அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள ராஜேஷ்குமார், விஸ்வநாதனை விடுவிக்க தயார் என தமிழக வெற்றி கழக அரசு காங்கிரஸை எச்சரிக்குமா என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கேள்வியெழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நமது பரந்து விரிந்த பாரதத்தில் பல்வேறு மாநில ஆட்சியாளர்கள் உள்ளனர். அவர்களில் திமிர்த்தனமும், அதிகார மமதையும், சர்வாதிகார மனப்பான்மையும், சகோதரத்துவத்தை சீர்குலைக்கும் எண்ணம் கொண்ட ஒரே ஆட்சியாளர்களாகத் திகழ்வது கர்நாடகத்தை நிர்வகிக்கும் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் என்பது நம் நாட்டின் சாபக்கேடு. தமிழ்நாடு டெல்டா மாவட்ட விவசாயிகள் தங்களின் வேளாண் தொழிலுக்கு காவேரி நீரை நம்பித்தான் இருக்கிறார்கள்.

சுமார் 20-க்கும் மேற்பட்ட மாவட்ட மக்கள் குடிநீருக்கு காவேரி நீரை பயன்படுத்தி வருகிறார்கள். தண்ணீருக்காக நாம் அவர்களிடம் கையேந்தி நிற்க வேண்டும் என்று கர்நாடக ஆட்சியாளர்கள் நினைக்கிறார்களே தவிர, காவேரியில் நமக்குள்ள உரிமையை உணர மறுக்கிறார்கள். காவேரி நதிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட காவேரி நதிநீர் தகராறு தீர்ப்பாயமும், உச்ச நீதிமன்றமும் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டி பல தீர்ப்புகளை வழங்கிய பின்பும், அவைகளை உதாசீனப்படுத்துவதையே கர்நாடக ஆட்சியாளர்கள் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

கர்நாடக மாநிலத்தின் பெரும் வளர்ச்சிக்கு அங்கு வாழும் தமிழர்களின் உழைப்புதான் காரணம் என்பதை, தற்போது ஆட்சி செய்யும் கர்நாடக காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சர் டி.கே. சிவகுமார் மறந்துவிடக்கூடாது. காங்கிரஸ் அரசின் நீர்பாசனத் துறை அமைச்சர் தமிழ்நாட்டிற்கு தண்ணீர் தர முடியாது என்றும், காவேரி மேலாண்மை ஆணையம் தண்ணீர் தர உத்தரவிடவில்லை என்றும், தமிழகத்திடமிருந்து காவேரியில் உரிய பங்கு நீரை திறந்துவிட எந்தக் கோரிக்கையும் விடவில்லை என்றும் கூறியதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன.

தமிழகத்திற்கு தண்ணீர் தர வேண்டும் என்ற காவேரி ட்ரிபியூனல் தீர்ப்பையும், அதை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்ற உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலையும், கர்நாடக அரசு முறையாக செயல்படுத்துகிறதா என்பதை கண்காணிப்பது தான் காவேரி மேலாண்மை ஆணையத்தின் பணி. இதை மறைத்துவிட்டு, மேலாண்மை ஆணையம் உத்தரவிடவில்லை, தண்ணீர் தரமுடியாது என்று கர்நாடக நீர்பாசனத் துறை அமைச்சர் ராமலிங்க ரெட்டி சொல்வது வடிகட்டிய பொய். காங்கிரஸ் விளையாடுவதை, தமிழக வெற்றி கழக அரசு கைகட்டி வேடிக்கை பார்க்கக்கூடாது! கர்நாடக அரசு காவேரி நதிநீர் தீர்ப்பாயம் மற்றும் உச்சநீதிமன்றத்தின் உத்தரவை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்றும், ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் கர்நாடகம் தமிழகத்திற்கு தரவேண்டிய பங்கு நீரைப் பெறுவதற்கு த.வெ.க. அரசின் முதலமைச்சர் கர்நாடக அரசை வலியுறுத்த வேண்டும்.

காவேரியில் தமிழகத்திற்குரிய பங்கு நீரை கர்நாடக அரசு உடனடியாக விடுவிக்கவில்லையெனில், "தமிழக அமைச்சரவையில் இருந்து காங்கிரஸ் அமைச்சர் விடுவிக்கப்படுவார்" என்று கர்நாடக காங்கிரஸ் கட்சியை எச்சரிக்க தமிழக வெற்றி கழக அரசின் முதலமைச்சர் தயாரா ? "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" - "ஆட்சிப் பொறுப்பில் இருந்து தவறி, மக்களுக்கு அநீதி இழைப்பவர்களை அந்த அறநெறியே, எமனாக (கூற்றாக) மாறி தண்டிக்கும்" என்று தமிழ்நாடு, கர்நாடகா இரு ஆட்சியாளர்களையும் எச்சரிக்கிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மத்திய கிழக்கில் மீண்டும் போர் பதற்றத்தால் கவலை அளிப்பதாக இந்தியா தெரிவிப்பு



மத்திய கிழக்கில் மீண்டும் போர் பதற்றத்தால் கவலை அளிப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது. ஈரானின் அணு ஆயுத திட்டங்களை முன்வைத்து அந்த நாடு மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் கடந்த பிப்ரவரி 28-ந்தேதி திடீர் தாக்குதல் நடத்தின. இதில் முதல் நாளிலேயே ஈரானின் உச்சபட்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். அவருடன் அவரது குடும்பத்தை சேர்ந்த சிலரும் உயிரிழந்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த ஈரான், இஸ்ரேல் மீது பதிலடி தாக்குதலை தொடுத்தது. அத்துடன் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்காவின் படைத்தளங்களை குறிவைத்தும் தாக்கியது. மறுபுறம் லெபனானை சேர்ந்த ஹிஸ்புல்லா அமைப்பினருக்கும், இஸ்ரேல் ராணுவத்துக்கும் இடையேயும் பயங்கர தாக்குதல்கள் நடந்தன. ஒரு மாதத்துக்கும் மேலாக நீடித்த இந்த போர் ஈரான் மற்றும் லெபனானில் ஆயிரக்கணக்கானோரின் உயிரை பறித்தது. அது மட்டுமின்றி வளைகுடா பிராந்தியம் மட்டுமின்றி ஒட்டுமொத்த உலகையும் பாதித்தது.

இடையில் ஹார்முஸ் நீரிணையையும் ஈரான் மூடியதால் கச்சா எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் போக்குவரத்து முடங்கி இந்தியா உள்ளிட்ட நாடுகள் பாதிப்பை சந்தித்தன. மேலும் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்ததால் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் கியாஸ் உள்ளிட்டவற்றின் விலை அதிகரித்து சர்வதேச நாடுகளில் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகினர்.

சுமார் 40 நாட்கள் தீவிர தாக்குதலுக்குப்பின் இருதரப்பும் தற்காலிக போர் நிறுத்தத்தை அறிவித்தன. பின்னர் பெரும் முட்டுக்கட்டைகளுக்குப்பின் கடந்த மாதம் 17-ந்தேதி ஈரான்-அமெரிக்கா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதற்கிடையே போரின் முதல் நாளில் கொல்லப்பட்ட ஈரான் உச்சபட்ச தலைவர் அயதுல்லா அலி காமேனியின் உடல் அடக்க சடங்குகளும் ஈரானில் தொடங்கின. கடந்த 4-ந்தேதி தொடங்கிய இந்த இறுதிச்சடங்குகள் இன்றுடன் நிறைவடைகிறது. அதைத்தொடர்ந்து காமேனி பிறந்த மசாத் நகரில் இன்று உடல் அடக்கம் நடக்கிறது.

அத்துடன் அடுத்த சில மணி நேரங்களில் ஈரான் மீது பயங்கர தாக்குதலை நடத்தியது. குறிப்பாக ஈரானின் ரேடார் அமைப்புகள், வான் பாதுகாப்பு அமைப்புகளை குறிவைத்து தாக்கியது.

இந்த தாக்குதல் மற்றும் போர் நிறுத்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதால் வளைகுடா பிராந்தியம் முழுவதும் மீண்டும் உச்சக்கட்ட போர் பதற்றம் நிலவி வருகிறது. இந்நிலையில் மத்திய கிழக்கில் வணிகக் கப்பல்கள் மீது மீண்டும் நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து, மோதல்கள் அதிகரித்திருப்பது மிகுந்த கவலை அளிப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

# இந்தியாவில் முதலீடு செய்ய ஆஸ்திரேலியா நிறுவனங்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு!

இந்தியாவில் முதலீடு செய்ய ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். பிரதமர் மோடி அரசு முறை பயணமாக இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். முதற்கட்டமாக இந்தோனேசியா பயணத்தை நிறைவு செய்த அவர், அடுத்த கட்டமாக ஆஸ்திரேலியா சென்றடைந்தார்.

அப்போது மெல்போர்ன் விமான நிலையத்தில் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதன் பின்னர் ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீசை பிரதமர் மோடி சந்தித்தார். இந்த சந்திப்பிற்கு பிறகு, இந்தியா, ஆஸ்திரேலியா தொழில்முனைவோர் சந்திப்பில் தொழிலதிபர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அப்போது, அவர் பேசியதாவது இந்தியாவின் வளர்ச்சி ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கு மிகப்பெரிய வாய்ப்புகளை வழங்குகிறது. நாம் ஒன்றிணைந்து, நம்பிக்கையான மற்றும் எதிர்காலத்திற்குத் தயாரான கூட்டாண்மைகளை உருவாக்க முடியும். இருதரப்பு வர்த்தக உறவுகள் அடுத்த கட்டத்திற்கு முன்னேற இந்திய மாநிலங்களும் ஆஸ்திரேலிய மாகாணங்களும் ஆற்றல்மிக்க பொருளாதாரக் கூட்டாண்மைகளை உருவாக்குவது முக்கியம் எனக் கூறினார்.



இந்த நிகழ்ச்சியின் போது ஆஸ்திரேலியன் சூப்பர் நிறுவனம் இந்தியாவில் ரூ.3,300 கோடி முதலீடு செய்ய முன்வந்ததை பிரதமர் மோடி வரவேற்றார். மேலும், இந்தியாவில் முதலீடு செய்ய ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார்.

# ஈரான் மீது 2 நாள் அமெரிக்கா தாக்குதல்களில் 14 பேர் பலியாகினர்



ஈரான் மீது 2 நாட்களாக அமெரிக்கா நடத்திய தாக்குதல்களில் 14 பேர் பலியாகி உள்ளனர். 78 பேர் காயமடைந்து உள்ளனர். ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியில் நேற்று வர்த்தக கப்பல்கள் மீது திடீரென்று ஈரான் தாக்குதல் நடத்தியது. இதுபற்றி ஈரானின் ஐ.ஆர்.ஐ.பி. என்ற அரசு ஊடகம் வெளியிட்ட செய்தியில், ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியில், ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவதற்கு முன்பிருந்த சூழல் இன்னும் திரும்பவில்லை.

இந்த ஜலசந்தி வழியே செல்லக்கூடிய அனைத்து கப்பல்களும், ஈரான் அறிவித்த கடல் வழியிலேயே பயணிக்க வேண்டும். அப்படி இல்லையெனில், அந்த கப்பல்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படாது என்று தெரிவித்தது. ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியில் தாக்குதல்களை நிறுத்துவதற்காக, அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒரு வார கால ஒப்பந்தம் காலாவதியான நிலையில், இந்த தாக்குதல் நடந்துள்ளது என அதுபற்றிய அறிக்கை தெரிவிக்கின்றது. இதனால், இரு நாடுகளுக்கு இடையேயான பதற்றம் அதிகரித்தது.

இந்த நிலையில், துருக்கியின் அங்காரா நகரில் நேட்டோ உச்சி மாநாடு நடந்தது. இதில், நேட்டோ நாடுகள் கலந்து கொண்டுள்ளன. இந்த மாநாட்டில் அமெரிக்க அதிபர் டிரம்ப் பங்கேற்று பேசும்போது, ஈரானுடனான போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ரத்து செய்யப்படுகிறது என திடுக்கிடும் அறிவிப்பை வெளியிட்டார்.

இதனால் அமெரிக்கா-ஈரான் இடையே மீண்டும் போர் பதற்றம் அதிகரித்து உள்ளது. அவர் தொடர்ந்து கூறும்போது, ஈரானுடன் பேசி நேரம் வீணாக்க விரும்பவில்லை. ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியில் 3 கப்பல்களை தாக்கி ஈரான் அழித்து விட்டது என்று குற்றச்சாட்டாக கூறினார். இந்த நிலையில், ஈரானை கடுமையாக எச்சரிக்கும் வகையில் டிரம்ப் நேற்றிரவு பேசினார். அப்போது அவர், ஈரான் மிகவும் மோசமாக நடந்து கொள்கின்றது.

ஈரான் மீது கடுமையான தாக்குதலை நடத்தினோம். மீண்டும் ஈரான் மீது தாக்குதல் நடத்துவோம். நிலைமை எப்படி அமைகிறது? என பார்ப்போம். ஈரான் கடந்த 47 ஆண்டுகளாக மக்களை கொன்று வருகிறது என்று கடுமையாக கூறினார். இந்த சூழலில், ஈரான் சுகாதார அமைச்சகம் வெளியிட்ட செய்தியில், ஈரான் மீது 2 நாட்களாக அமெரிக்கா நடத்திய தாக்குதல்களில் இதுவரை 14 பேர் பலியாகி உள்ளனர். 78 பேர் காயமடைந்து உள்ளனர் என தெரிவித்தது.

# மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் சிந்தனையைத் தூண்டும் திரை இசைப் பாடல்கள் ஓர் அழகியல் மெய்யியல் பார்வை

மக்கள் கவிஞர் கல்யாணசுந்தரத்தை அவரது திடீர் அகால மரணம் அவரது 29வது வயதில், 1959ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 8ஆம் திகதி எம்மிடமிருந்து பறிக்காமல் இருந்திருந்தால், தமிழ் திரை இலக்கிய உலகம், தெவிட்டாத தேனமுதக் கவிதைகளையும் பாடல்களையும் பெற்று மகிழ்ந்திருக்கும். அவர் பொதுவுடைமைத் தத்துவத்தின் அடிப்படையில் விவசாயிகளினதும் பாமரத் தொழிலாளிகளினதும் ஆசைகளையும் பிரச்சினைகளையும் பிரதிபலித்து எழுதிக் குவித்த திரை இசைப்பாடல்களைத் திறனாய்வு செய்து பசுமையான எண்ணங்களையும் பாட்டாளி மக்களின் சிந்தனையைத் தூண்டும் உணர்ச்சி மிக்க திரையிசைப் பாடல்களையும் இக்கட்டுரையில் சுருக்கமாகப் பார்ப்போம்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பொதுவுடைமைத் தத்துவத்தை முதன்முதலில் தமிழ் திரை இசைப் பாடல்களில் புகுத்தி, தமிழ்த் திரை இசைப் பாடல்களின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகத் திகழ்பவர். குறிப்பாகச் சொல்வதானால், மக்கள் திலகம் எம்ஜிஆர் அவர்களை புரட்சித் தலைவராகவும் மக்கள் திலகமாகவும் மாற்றிய பெருமை பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் திரை இசைப் பாடல்களுக்கே உரித்தானது என்றால் அது மிகையாகாது. இதனை எம்ஜிஆர் அவர்களே ஒரு கூட்டத்தில் ஒப்புக்கொண்டு, மக்கள் கவிஞரின் பெருமையைப் பாராட்டியிருக்கிறார்.

இதனைப் பற்றி பின்பு இக்கட்டுரையில் விபரமாகப் பார்ப்போம்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் (ஏப்ரல் 13, 1930 - அக்டோபர் 8, 1959) ஒரு சிறந்த தமிழ் அறிஞர், சிந்தனையாளர், பாடலாசிரியர் ஆவார்.

எளிமையான தமிழில் சமூக சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியது இவருடைய சிறப்பாகும். இவருடைய பாடல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தான் வாழ்ந்த தஞ்சை மாவட்ட விவசாயிகளினதும் தொழிலாளர்களினதும் பிரச்சினைகளையும் ஆசைகளையும் அபிலாஷைகளையும் தனது திரை இசைப் பாடல்களில் பிரதிபலித்தார்.

இங்கே எனது இக்கட்டுரையின் அடிப்படை நோக்கம், அழகியலில் கலைக்காகவே என்னும் அழகியல் மெய்யியலாளர்கள் கலையின் உருவத்துக்கும் உள்ளடக்கத்துக்கும் தத்தமது ஆக்கங்களில் முக்கியத்துவம் கொடுப்பார்கள். இந்த வகையில் கவியரசு கண்ணதாசனும் உடுமலை நாராயண கவியும் மருதகாசியும், தஞ்சை இராமதாசும் தமிழ் திரை இசைப் பாடல்கள் இயற்றுத் துறையில் கொடிகட்டிப் பறந்த ஐம்பதுகளில், இவர்களுக்கிடையில் புகுந்து, மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மாமேதை விளாடிமீர் லெனின் கூறியது போல கலை மக்களுக்காகச் செயற்பட்டு பாட்டாளி மக்களினது உணர்ச்சிகளையும் பிரச்சினைகளையும் பிரதிபலிக்க வேண்டும் என்ற பொதுவுடைமைத் தத்துவத்துக்கு இலக்கணமாகத் திகழ்ந்து, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தமது திரை இசைப் பாடல்களை இயற்றினார்.

இந்த வகையில், உழைக்கும் தொழிலாளர்களதும் விவசாயிகளதும் பாட்டாளி மக்களதும் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையும் ஆசைகளையும் தனது திரை இசைப் பாடல்களில் உருவங்களைக் காட்டிலும் இம்மக்களின் உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாடல்களை இயற்றினார்.

பட்டுக்கோட்டை தனது இளம் வயதிலேயே பொதுவுடைமைத் தத்துவத்திலும் கம்யூனிசக் கட்சியிலும் விவசாயிகள் உரிமைக்குப் போராடும் சங்கங்களிலும் மிகவும் ஈடுபாடு கொண்டதோடு மட்டுமல்ல, பொதுவுடைமைத் தத்துவத்தை தான் இயற்றிய எல்லாப் பாடல்களிலும் புகுத்தினார்.

சுருங்கக் கூறுவதாயின், நான் இக்கட்டுரையில் மேலே கூறியது போல, இலக்கியம் என்பது மாமேதை லெனின் கூறியது போல, பாட்டாளி மக்களின் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடியைப் போன்றதென்பார்கள். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் திரை இசைப் பாடல்கள் அவர் தான் வாழ்ந்த கால பாட்டாளி விவசாயிகளது பிரச்சினைகளைப் பிரதிபலித்து அவற்றுக்கான தீர்வை வேண்டும் பாடல்களாக அமைந்திருந்தன. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தனது திரை இசைப் பாடல்களுக்கு கிராமிய இசையமைத்துப் பயன்படுத்தியபோது நாட்டு விடுதலை உணர்வு, சமுதாயச் சிந்தனைகள் பற்றிய சமத்துவக் கருத்துக்களை நல்ல எளிய தமிழில் எம்முடைய காதுகளில் ஒலிக்கக் கேட்டோம்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் சமகாலத்தில் தமிழ் சினிமா திரை இசைத் துறைப் பாடல்களில் மூன்று முக்கிய திருப்பங்கள் ஏற்பட்டன. சமுதாயச் சீர்திருத்த பகுத்தறிவுத் திசை இசைப் பாடல்களை எளிய, இனிய தமிழில் உடுமலை நாராயண கவிஞர் எழுதினார். காதல், வாழ்வியல், தத்துவ திரை இசைப் பாடல்களை பண்டைய இலக்கியப் பாங்கில் கவியரசு கண்ணதாசன் இயற்றினார். தொழிலாளர், விவசாயிகள் மற்றும் பாட்டாளி மக்களது வாழ்வுப் பிரச்சினைகளையும் உயர்வையும் பகுத்தறிவுக் கொள்கை அடிப்படையிலும் பொதுவுடைமைத் தத்துவ அடிப்படையிலும் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் திரை இசைப் பாடல்களில் முதன்மைப்படுத்தி ஒலித்தன.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பொது மேடைக்கும் நாடக மேடைகளுக்கும் திரைப்படங்களுக்குமே இவர் பெரும்பான்மையான பாடல்களை எழுதியதால், இவருடைய பாடல்கள் ஏலவே இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டது போல, கிராமியப் பண் நிறைந்த பாடல்களாகவே மிகுதியும் உள்ளன. எளிய தமிழ் நடை, பாமரர் உள்ளத்தைப் பிரதிபலிக்கும் ஆற்றல், உணர்ச்சிக் கொந்தளிப்பு ஆகியவற்றின் இணைப்பே மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்கள். இக்கட்டுரையின் பிற்பகுதியில் உதாரணமாக இவரது சிந்தனையைத் தூண்டும் திரை இசைப் பாடல்களை விபரமாகப் பார்ப்போம்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு:

தமிழ் நாடு மாநிலம் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே உள்ள செங்கப்படுத்தான்காடு என்னும் சிற்றூரில் அருணாச்சலனார் - விசாலாட்சி ஆகியோருக்கு இளைய மகனாக 13.04.1930ல் எளிய விவசாய குடும்பத்தில் பிறந்தார். இவர் தந்தையும் கவி பாடும் திறன் பெற்றவர். கணபதிசுந்தரம் என்கிற மூத்த சகோதரரும் வேதநாயகி என்கிற இளைய சகோதரியும் உள்ளனர். பள்ளிப்படிப்பு மட்டுமே கொள்ள முடிந்த கல்யாணசுந்தரம் திராவிட இயக்கத்திலும், கம்யூனிசத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய துணைவியார் பெயர் கௌரவாம்பாள். 1959ஆம் ஆண்டு இவர்களுடைய குழந்தை குமரவேல் பிறந்தது. அதே ஆண்டில் (08.10.1959) இவர் அகால மரணம் அடைந்தார்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் கவி புனையும் ஆற்றல்:

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தமது வாழ்க்கையில் 17 வகையான தொழில்களைப் புரிந்தார் என அறியப்படுகிறது. விவசாயி, கிடுகு வியாபாரி, உப்பு வியாபாரி, மீன் வியாபாரி, இட்லி வியாபாரி, நடிகர், பாடலாசிரியர் எனப் பதினேழு வகையான தொழில்களைப் புரிந்து வறுமையில் வாழ்ந்தார். இவற்றை, தான் இயற்றிய பாடல்களில் பொதுவுடைமைத் தத்துவ அடிப்படையில் இயற்றினார். இறுதியாகத் தனது கவிதை சினிமாப் பாடல்கள் எழுதும் கலையை பாவேந்தர் பாரதிதாசனிடம் முறையாகக் கற்று தனது குறுகிய கால வாழ்வில், என்றும் அவரது புகழுக்குக் காரணமான புகழ்பெற்ற பல திரை இசைப் பாடல்களை இயற்றினார்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தனது 19ஆம் வயதிலேயே கவிதை, திரை இசைப் பாடல்கள் எழுதுவதில் அதிக ஆர்வம் காட்டினார். இவரது திரை இசைப் பாடல்கள், ஏலவே நான் கூறியதுபோல, கிராமியப் பண்ணைத் தழுவியவை. இவர் தனது பாடல்களில் உருவங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், உள்ளடக்கத்துக்கும் உணர்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் காட்டியவர். தான் வாழ்ந்த சமூகத்தில் அப்போதிருந்த குறைகளையும் வளர வேண்டிய திறமைகளையும் சுட்டிக் காட்டியவர். தமிழ் சினிமாத் திரை உலகில், பாட்டாளி மக்களின் ஆசைகளையும் ஆவேசத்தையும் அந்தரங்க சுத்தியுடன் திரை இசைப் பாடல்களாக இயற்றினார். இவர், தமது திரை இசைப் பாடல்களில் இயற்றிவந்த கருத்துச் செறிவும் கற்பனை உரமும் படைத்த பல பாடல்களையும் கவிதைகளையும் ஜனசக்தி என்னும் பத்திரிகை வெளியிட்டு வந்தது. 1954ஆம் ஆண்டு படித்த பெண் திரைப்படத்திற்காக முதல் பாடலை இயற்றி அந்தத் துறையில் அழுத்தமான முத்திரை பதித்தார்

நான் ஏலவே குறிப்பிட்டதுபோல, இளம் பராயத்திலேலயே விவசாய சங்கத்திலும் பொதுவுடைமைத் தத்துவத்திலும் ஈடுபாடுகொண்டிருந்தமையால் இதனைத் தான் எழுதிய எல்லாப் பாடல்களிலும் பிரதிபலித்ததோடு மட்டுமல்லாமல் இறுதிவரையிலும் தன் வாழ்விலும் கடைப்பிடித்து வந்தார்.

அத்தோடு, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வீரத் தியாகிளான சிவராமன், இரணியன் ஆகியோருடன் சேர்ந்து விவசாய இயக்கத்தைக் கட்டி வளர்க்க தீவிரமாகப் பங்கெடுத்தார்.

இவருக்கு இருந்த நடிப்பாசையின் காரணமாக, சக்தி நாடக சபாவில் தான் பின்னாளில் பிரபலமான திரைப்பட நடிகர்களான சிவாஜிகணேசன், எம்.என்.நம்பியார், எஸ்.வி.சுப்பையா, ஓ.ஏ.கே.தேவர் ஆகிய தலைசிறந்த நடிகர்களோடு நடத்து வந்தார். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஓ.ஏ.கே.தேவரின் நெருங்கிய நண்பராவார். சக்தி நாடக சபாவின் நாடகங்கள் ஒவ்வொன்றாகத் திரைப்படமாகியும் அதில், மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரபல நடிகர்கள் சினிமாவில் நுழையவும் ஆரம்பித்தனர். ஆனால் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நடிப்பில் ஈடுபாடு காட்டாமல் திரை இசைப் பாடல்கள் எழுதும் கலையைக் கற்றுக்கொள்ள புதுச்சேரி சென்று புரட்சிக் கவி பாரதிதாசனிடம் உதவியாளராக குயில் பத்திரிகையில் சேர்ந்து இறுதியில் திரை இசைப் பாடல்கள் இயற்றும் மக்கள் கவிஞராக உருவானார். பிற்காலத்தில் எம்ஜிஆர் தொடர்பு ஏற்பட்டதனால் புகழின் உச்சிக்குச் சென்றார்.

மக்கள் திலகம் எம்ஜிஆரின் வாழ்க்கையை மாற்றி, அவரைப் புரட்சித் தலைவராக்கிய மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் திரை இசைப் பாடல்கள்:

1950களில் சிம்மக்குரலோன் சிவாஜி கணேசனும் விழி அழகி வைஜயந்திமாலாவும் தமிழ் சினிமாவில் கொடிகட்டிப் பறந்த காலம். எம்ஜிஆர் அக்காலப்பகுதியில் திரையுலகில் பெரிதாக எடுபடவில்லை. எம்ஜிஆருக்கு அழகிருந்தது. வாள் சண்டையிலும் தூள் பரத்தினார். ஆனால் அவரது நடிப்பு மக்கள் மத்தியில் அவ்வளவாகப் போய்ச் சேராததினால் கவலையுற்றிருந்தார். அக்காலப் பகுதியில்தான் அவருக்கு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அறிமுகமானார். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாட்டெழுதும் திறமையை நன்கறிந்த எம்ஜிஆர், அவரை தனது சினிமாத் துறை வளர்ச்சிக்கு நன்கு பயன்படுத்தி, ஏழை எளிய மக்களை மீட்பவராக அவரது பகுத்தறிவுக் கொள்கைப் பாடல்களையும் பொதுவுடைமை சிந்தனைப் பாடல்களையும் எவ்வாறு தனது சினிமாப் படங்களில் பயன்படுத்தி புகழின் உச்சிக்கும் பாமர, பாட்டாளி மக்கள் உள்ளங்களில் அழியாத இடத்தையும் பிடித்து, அரசியலில் உச்சத்துக்குச் சென்றார் என்பதை பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பின்வரும் பாடல்கள் மூலம் விபரமாகப் பார்ப்போம்.

1954இல் மலைக்கள்ளன் என்னும் படத்தில், “எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே” என்று இடம்பெற்ற பாடலில் எம்ஜிஆர் அரசியலில் தான் தூய்மையான ஏழைப் பங்காளன் என்னும் விம்பத்தை பொதுமக்கள் மத்தியில் விதைத்தார். இதனைத் தொடர்ந்து நாடோடி மன்னன் படத்தில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் திறமையைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆனார். இராம.வீரப்பன் மூலம் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எம்ஜிஆருக்கு அறிமுகமானபோது, எம்ஜிஆர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தைப் பார்த்து, “சொன்னீங்க?” என்று எம்ஜிஆரைப் பார்த்துக் கேட்க, “சும்மா” என்று மீண்டும் எம்ஜிஆர் கூற, அதனையே ஒரு பல்லவியாக வைத்து பின்வரும் புகழ்பெற்ற பாடல் உருவானது.

பெண்:
“சும்மா கெடந்த நிலத்தைக் கொத்தி
சோம்பலில்லாமே ஏர் நடத்தி
கம்மா கரையை ஒசத்திக் கட்டி
கரும்புக் கொல்லையில் வாய்க்கால் வெட்டி
சம்பாப் பயிரைப் பறிச்சு நட்டு
தகுந்த முறையில் தண்ணீர் விட்டு
நெல்லு வெளைஞ்சிருக்கு வரப்பும் உள்ளே மறைஞ்சிருக்கு - அட
காடு விளைஞ்சென்ன மச்சான் - நமக்கு
கையுங் காலுந்தானே மிச்சம்?
ஆண்:
இப்போ காடு விளையட்டும் பெண்ணே - நமக்கு
காலமிருக்குது பின்னே
மண்ணைப் பிளந்து சுரங்கம் வச்சு
பென்னை எடுக்கக் கனிகள் வெட்டி

மதிலு வச்சு மாளிகை கட்டி
கடலில் மூழ்கி முத்தையெடுக்கும்
வழிகாட்டி மரமான தொழிலாளர் வாழ்க்கையிலே
பட்ட துயரினி மாறும் - ரொம்பக்
கிட்ட நெருங்குது நேரம்
பெண்:
அட காடு விளைஞ்சென்ன மச்சான் - நமக்கு
கையுங் காலுந்தானே மிச்சம்?
ஆண்:
இப்போ காடு விளையட்டும் பெண்ணே -நமக்கு
காலமிருக்குது பின்னே
பெண்:
மாடா உழைச்சவன் வாழ்க்கையிலே - பசி
வந்திடக் காரணம் என்ன மச்சான்? (தொடர்ச்சி 14ம் பக்கம்)

# Student of Ponmathy Pathmavarathan of 'Potsathangai Kalaikoodam,

# Aparna Uthayakumar's Bharathanatya Arangetram was highly appreciated by the audiance!

# கனடா "பொற்சதங்கை கலைக்கூடம்" நடன ஆசிரியை பொன்மதி பத்மவரதனின் மாணவி அபர்ணா உதயகுமாரின் பரதநாட்டிய அரங்கேற்றம் சபையோரால் பாராட்டப்பெற்றது













கனடா "பொற்சதங்கை கலைக்கூடம்" நடனப் பள்ளி ஆசிரியை பொன்மதி பத்மவரதனின் மாணவி அபர்ணா உதயகுமாரின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று மிசிசாகா நகரில் உள்ள "மெடோவேல் தியேட்டர் மண்டபத்தில் நடைபெற்றபோது. குருவின் அர்ப்பணிப்பான கற்பித்தல் திறன் மற்றும் மாணவி அபர்ணா. பரதக் கலையின் மீது காட்டிய சிரத்தை மற்றும் ஆர்வம் ஆகியவற்றால் சிறந்த ஒரு விழாவாக நன்கு ரசிக்கப்பெற்றும் சபையோரின் பாராட்டுக்களைப் பெற்றும் ஒரு பேசப்படும் அரங்கேற்ற விழாவாக பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

நடனச் செல்வி அபர்ணாவின் குருவின் ஏற்பாட்டில் சிறந்த அணிசேர் கலைஞர்கள் அன்றைய தினம் மேடையை அலங்கரித்தனர். (தொடர்ச்சி 11ம் பக்கம்)



ontarioliberal.ca/ssw | @ontarioliberalparty

ஸ்கார்பரோ மக்களே!
உங்கள் மாகாண அரசிடமிருந்து
நீங்கள் இன்னும் அதிகமாகப் பெறுவதற்குத்
தகுதியானவர்கள்.

டக் ஃபோர்டின் 8 ஆண்டு ஆட்சிக்குப் பின்னர்,
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
குடும்பங்கள் அதிகமாகச் செலுத்துகிறார்கள்,
நீண்ட காலம் காத்திருக்கிறார்கள்,
மேலும் எதிர்பார்ப்பதிலும் பார்க்க குறைவாகவே
பெறுகிறார்கள்.

அஹ்சானுல் ஹாஃபிஸ்
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
உங்களுக்கான
வேட்பாளர்

*Authorized by the Scarborough Southwest Riding Association

LIBERAL

AHSANUL HAFIZ

THE CANDIDATE FOR YOU IN SCARBOROUGH SOUTHWEST



Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரபபவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24







# Guru New York Rajah's SAREGA Music School of Fine Arts celebrates it's 25th year Silver Jubilee!

# இசையாசிரியர் நியுயோர்க் ராஜா அவர்களின் "சரிகா" இசைக் கல்வி நிலையத்தின் 25வது ஆண்டு வெள்ளி விழாக் கொண்டாட்டம்!










கனடாவில் நன்கு அறியப்பெற்ற இசையாசிரியர் நியுயோர்க் ராஜா அவர்களின் "சரிகா" இசைக் கல்வி நிலையத்தின் 25வது ஆண்டு வெள்ளி விழாக் கொண்டாட்டம் கடந்த யூன் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நோர்த் யோர் நகரில் உள்ள கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. அன்றை அரை நாள்விழா இந்த கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்தவதில் இசையாசிரியர் நியுயோர்க் ராஜா அவர்களின் குடும்பத்தினரும் பெற்றோரும் மாணவ மணிகளும் அத்துடன் இசைக் கலைஞர்கள்- வர்த்தக அன்பர்கள்- ஊடக நிறுவனங்களைச் சார்ந்தவர்கள்- பத்திரிகை ஆசிரியர்கள் பாடக பாடகிகள் என அனைத்துத் தரப்பினரும் தங்களை அர்ப்பணித்து விழாவை வெற்றிகரமான நடத்துவதற்கு பக்கபலமாக விளங்கினார்கள் என்பதை அங்கு அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும் இசையா-சிரியர் நியுயோர்க் ராஜா அவர்கள் விழாவின் ஆரம்பம் தொடக்கம் இறுதி-வரையிலும் மேடையை விட்டு விலகிச் செல்லாமல் அனைத்தையும் நேரயாகக் கவனித்தும் விருந்தினர்களை வரவேற்றும் மாணவ மணிகளை உற்சாகப்படுத்தியும் பெற்றோருக்கு நன்றி செலுத்தியும் வர்த்தக அன்பர்களுக்கு தனது இதய பூர்வமான வாழ்த்துக்களைப் பகிர்ந்தும் ஊடக நண்பர்களை உற்சாகப்படுத்தியும் முழுக்கவனத்தோடு விழாவை தலைமை தாங்கி நகர்த்திச் சென்றார் என்றால் அது மிகையாகாது.

அன்றைய விழாவானது. இசையாசிரியர் நியுயோர்க் ராஜா அவர்களின் "சரிகா" இசைக் கல்வி நிலையத்தின் 25வது ஆண்டு வெள்ளி விழாக் கொண்டாட்டமாக மாத்திரமல்லாது, இனிய பாடக பாடகிகளைகளை மேடைக்கு அழைத்து அவர்களை பாட வைத்தும், குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்துள்ள பிரபல பாடகர் ராமு அவர்களை (எஸ்பிபி அவர்களைப் போன்ற குரல்வளம் மிக்கவர்) மேடையில் பாடவைத்தும் மாணவ மாணவிகளுக்கு பாராட்டுக்களை வழங்கவும் பயன்படுத்தினார் என்பது விழாவின் "உச்சக்கட்டம்" என்றே சொல்லவேண்டும்.

மேலும் அன்றைய விழா மேடையில் 5500 டாலர்களுக்கும் அதிகமான தொகையில் கொள்வனவு செய்யப்பெற்ற இசைக்கருவிகள் மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் ஆகியன மாணவ மாணவிகளுக்கும் ஏனையோருக்கும் வழங்கப்பட்டமை பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

"சரிகா" இசைக் கல்வி நிலையத்தில் தமது பிள்ளைகளை இசை பயிலவும் அல்லது இசைக்கருவிகள் வாசிக்க கற்றுக் கொள்ளவும் நியுயோர்க் ராஜா அவர்களை தொடர்பு கொள்ள 416 884 7288 என்னும் இலக்கத்திலோ அன்றி **Learn@saregamusic.com** என்னும் மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

# கனடா "பொற்சதங்கை கலைக்கூடம்" நடன ஆசிரியை பொன்மதி பத்மவரதனின் மாணவி அபர்ணா உதயகுமாரின் பரதநாட்டிய அரங்கேற்றம் சபையோரால் பாராட்டப்பெற்றது

(9ம் பக்கத் தொடர்ச்சி)



அவர்களது இசைப் பங்களிப்பானது அபர்ணாவின் அரங்கேற்றத்திற்கு முன்னதான நேர்த்தியான கூட்டுப் பயிற்சி மற்றும் ஒத்திகை ஆகியவற்றாலும் குரு பொன்மதி பத்மவரதன் அவர்களது கற்பித்தல் திறன் மற்றும் ஒழுங்கமைக்கப்பெற்றிருந்த "நட்டுவாங்கம் ஆகியவற்றால் சபை-யோர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் பாராட்டும் தரத்தைப் பெற்றிருந்தது என்றால் அது மிகையாகாது.

மேடையை அலங்கரித்த முதிர்ச்சியும் அனுபவமும் கொண்ட அணி சேர் கலைஞர்களது அர்ப்பணிப்பான பங்களிப்பு அபர்ணாவின் அரங்கேற்றத்தை மேலும் சில படிகள் உயரத்திற்கு இட்டுச் சென்றது என்பதை ரசிகர்கள் தங்கள் கருத்துக்களாகப் பகிர்ந்த சென்றனர்.

மேற்படி அரங்கேற்றத்திற்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்த "பரதகலா வித்தகர்" ஸ்ரீமதி குமுதினி ஸ்ரீகாந்தன் நடனச் செல்வியின் சிறப்பான அம்சங்களை குறிப்பிட்டு அவரது குருவையும் பாராட்டிச் சென்றார். அதற்கு முன்னர் உரையாற்ற அழைக்கப்பெற்றிருந்த நடனச் செல்வி அபர்ணாவின் தமிழாசிரியையான திருமதி சாந்தி நிரஞ்சன்குமார் தனத உரையை மிகவும் நேர்த்தியாகவும் நிதானமாகவும் ஆற்றினார். அவர் தனது உரையில்: "பரதநாட்டியத்தை கற்பதும் அதை மேடையில் சமர்ப்பணம் செய்வது வெறும் உடலின் அசைவு-களை காட்டுவதற்காக அல்ல என்பதை அதை ரசிக்கும் நாம் உணரவேண்டும். பரதநாட்டியம் என்பது ஒரு புனிதமானதும் தெய்வீகத்தன்மை நிறைந்ததுமான ஒரு கலை வடிவம். அதனைக் கற்பதாலும் கற்பிப்பதாலும் மன அழுத்தங்கள் குறைவதற்கு சாத்தியமான அம்சங்கள் உள்ளன என்பதையும் நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும். இன்றைய அரங்கேற்றச் செல்வி அபர்ணாவின் குரு ஸ்ரீமதி பொன்மதி பத்மவரதனின் அர்ப்பணிப்பான கற்பித்தல் மற்றும் வழிகாட்டுதல் ஆக-ியன இன்று எமக்கு ஒரு எதிர்கால நர்த்தகியை உருவாக்கித் தந்துள்ளது" என்று புகழாரம் சூட்டினார்.

புஸ்பாஞ்சலி என்னும் முதலாவது உருப்படியிலிருந்து இறுதிவரை மிகுந்த அவதானத்துடனும் உற்சாகத்துடனும் தனது நடனங்களை மேடையில் சமர்ப்பணம் செய்த தனது மாணவிக்கு பாராட்டுக் கேடயம் மற்றும் சான்றிதழ் ஆகிவற்றை வழங்கிச் சிறப்புச் செய்தார் அவரது குரு ஸ்ரீமதி பொன்மதி பத்மவரதன் அவர்கள்.

----------------

*சத்தியன்*

# மரண அறிவித்தல்




தாய் மடியினில்
01-09-1955

அரன் அடியினில்
08-07-2026

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், ஜேர்மனி, கனடாவை வதிவிடமாகவும் கொண்ட கிருபாகரன் செல்வநாயகம் அவர்கள் 08.07.2026 புதன்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முன்னாள் விவேகானந்தா அச்சக உரிமையாளர் “அருட்கவிமாமணி” திரு வே. செல்வநாயகம், நாகரத்தினம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும்,
காலஞ்சென்றவர்களான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. ராமச்சந்திரன், பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும்,
கமலநாயகியின்(கமலா) ஆருயிர் கணவரும்,
கஜன், சித்தீசன், கிருஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், Bushraவின் அன்பு மாமனாரும், ,லியாசின் அன்புப் பேரனும்,
காலஞ்சென்றவர்களான புவனசுந்தரி(பவானி), மாலினிதேவி மற்றும் சிறீதரன் (விவேகா அச்சகம்), கிரிஜாலினி, பரிபாலினி(பிள்ளை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், குணராசன், காலஞ்சென்ற Dr. வேதநாதன் மற்றும் சிவகுமாரி, வரதராசா, கமலநாதன், இந்திரா, காலஞ்சென்றவர்களான சந்திரா, சிவகுமாரன் மற்றும் திலகா, யோகா, காலஞ்சென்ற செல்வகுமாரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 8911 Woodbine Avenue Markham, ON L3R 5G1இல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Homeஇல் 12-07-2026 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பிற்பகல் 2:30 மணியில் இருந்து 4:30 மணிவரை அதே இடத்தில் கிரியைகள் நடைபெற்று 5:00 மணிக்கு 2 Stalwart Industrial Dr., Gormley, ON L0H 1G0 இல் அமைந்துள்ள North Toronto Crematorium இல் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
கமலா (மனைவி) 416-724-8315
சிறீதரன் (சகோதரன்) 647-406-3296
கிரிஜாலினி (சகோதரி) 416-358-8482
பரிபாலினி (சகோதரி) 416-318-1839



# இலங்கைச் சிறைச்சாலைகளில் தொடரும் படுகொலைகள்!

*"1983 - 2026 ஆம் ஆண்டு வரை இலங்கையில் 6 சிறைச்சாலைப் படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. இதில் 1983, 1997, 2000 ஆகிய ஆண்டுகளில் நடந்த சிறைச்சாலைப் படுகொலைகள் முற்றிலும் இன ரீதியானவை. தமிழ் அரசியல் கைதிகளை இலக்கு வைத்தவை. இதில் 83 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 2012, 2020, சமீபத்திய 2026 ஆம் ஆண்டு சம்பவங்கள் சிறை நிர்வாகக் குறைபாடுகள், போதைப்பொருள் கும்பல் மோதல்கள் மற்றும் கைதிகளின் கிளர்ச்சிகள் காரணமாக ஏற்பட்டவை. இதில் 68பேர் படு-கொலை செய்யப்பட்டனர்."*

------------------------------------------------------------------------ கே.பாலா -

இலங்கையின் தலைநகர் கொழும்புக்கு அருகாமையிலுள்ள நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் அண்மையில் கைதிகளுக்கிடையில் வெடித்த மோதல் 22 கைதிகளினதும் 8 சிறைக்காவலர்களினதும் உயிர்களைக் குடித்தும் நூற்றுக்கும் மேற்பட்டோரை காயமடையவைத்துமுள்ள நிலையில் முழு நாடுமே அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது. அநுரகுமார அரசாங்கமும் இன்னொரு விமர்சனப் பொறியில், நெருக்கடியில் சிக்கியுள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை 680. ஆனால், இச்சம்பவம் நடந்த நேரத்தில் அங்கு 2,417 கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையிலேயே கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் குறித்த சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள தண்டனைக் கைதிகளுக்கும் விளக்கமறியல் கைதிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டிருந்ததுடன், இதில் கைதிகள் இருவர் உயிரிழந்திருந்தனர். இதன்போது காயமடைந்திருந்த 30க்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறான நிலையில் மறுநாளான திங்கட்கிழமையும் மோதல் வெடித்த நிலையிலேயே இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

எந்தவொரு நாட்டின் சிறைச்சாலைகளும் குற்றவாளிகளைத் திருத்தி, நல்வழிப்படுத்துவதற்கான ஒரு மறுவாழ்வு மையமாகவே பார்க்கப்படுகிறது. ஆனால், இலங்கையின் சிறைச்சாலைகளோ இன்று மரண பயமும், குருதி வாடையும் வீசும் கொலைச்சாலைகளாக உருவெடுத்துள்ளன. "தண்டனை என்பது சுதந்திரத்தை பறிப்பது மாத்திரமே, உயிரை அல்ல" என்ற உன்னத விதி, இலங்கை சிறைச்சாலைகளின் இரும்புச் சுவர்களுக்குப் பின்னால் பல நேரங்களில் தூக்கிலிடப்படுகிறது. இலங்கையில் அரங்கேறும் சிறைச்சாலை மோதல்களும், சிறைச்சாலைப் படுகொலைகளும் வெறும் செய்திகளாகக் கடந்துபோகக் கூடியவை அல்ல. அவை நாட்டின் ஒட்டுமொத்த சட்ட ஒழுங்கு மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பின் மீதான பெரும் கேள்விக்குறிகளாகவேயுள்ளன.

ஒரு சமூகத்தின் நாகரிகத்தை அந்த நாட்டுச் சிறைச்சாலைகள் கைதிகளை நடத்தும் விதத்தை வைத்தே மதிப்பிட முடியும் என்றார் நெல்சன் மண்டேலா. அந்த வகையில், இலங்கையின் சிறைச்சாலைகளில் அடிக்கடி நிகழும் மோதல்களும், படுகொலைகளும் நமது சமூகக் கட்டமைப்பின் பலவீனத்தையே அம்பலப்படுத்துகின்றன. அதிகளவிலான கைதிகளினால் இட நெரிசல், போதிய வசதியின்மை மற்றும் கைதிகளுக்கு இடையிலான உட்பகைகள் எனப் பல காரணங்கள் கூறப்பட்டாலும், மனித உயிர்களின் இழப்பிற்கு அவை நியாயமாகிவிட முடியாது. சிறைச்சாலைகளுக்குள் நடக்கும் இந்தத் தொடர் வன்முறைகள் வெறும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை மட்டுமல்ல, அது ஒட்டுமொத்தப் பாதுகாப்பு அமைப்பிலும் உடனடியாகச் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களை வலியுறுத்தும் ஓர் ஆபத்தான எச்சரிக்கை மணி.

சந்தேக நபர்களாக, குற்றவாளிகளாக சிறைச்சாலைகளுக்கு சென்றவர்கள் பிணமாக மீட்கப்படுவதும், பாதுகாப்பிற்குப் பொறுப்பானவர்களின் கண் முன்னேஇவர்கள் கொடூரமாகக் கொல்லப்படுவதும் இலங்கையின் சிறைச்சாலைகள் வரலாற்றில் தொடர்கதையாகிவிட்டன. வெலிக்கடை முதல் மஹர வரை நாம் கண்ட வன்முறைகளும், படுகொலைகளும் அரச இனவாதம், மற்றும் பாதாளக்குழுக்களின் திட்டமிடப்பட்ட வன்முறைகள் படுகொலைகளாகவே இருக்கின்றன. இதனை இலங்கை சிறைச்சாலைகளில் இன்றுவரை நடைபெற்ற வன்முறைகள், படுகொலைகள் மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

### வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை

தலைநகர் கொழும்பில் 1983 ஜுலை 24 ஆம் திகதி தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இதில் 3000க்கும் மேற்பட்ட தமிழர்கள் வெட்டியும் கொத்தியும் சுட்டும் தீயிட்டுக்கொளுத்தியும் அப்போதைய ஆடியளர்களான ஐக்கியதேசியக் கட்சியின் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசாங்கத்தின் ஆதரவுடன் படுகொலை செய்யப்பட்டனர். இதன்போது 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை வெலிக்கடை அதியுயர் பாதுகாப்பு சிறையிலிருந்த சிங்களக் கைதிகள், சிறைக்காவலர்களின் துணையோடு தமிழ் அரசியல் கைதிகள் மீது திட்டமிட்ட கொடூர தாக்குதல்களை நடத்தி தமிழ் மக்களின் போராட்ட இயக்கங்களின் தலைவர்களாகவிருந்த குட்டிமணி, தங்கத்துரை உட்ப 53 தமிழர்களை கொடூரமாக கண்களைதோண்டியும் வெட்டியும் குத்தியும் அடித்தும் கொன்றனர். இதில் படுகொலை செய்யப்பட்ட அனைவரும் தமிழ் அரசியல் கைதிகள்.

### களுத்துறை சிறைச்சாலை படுகொலை

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரணதுங்க ஆட்சியில் 12-12-1997 இல் களுத்துறை நகரில் உள்ள உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் அரசியற் கைதிகள் அதே சிறைச்சாலையில் சிறை வைக்கப்படிருந்த சிங்களக் கைதிகளினால் வெட்டிக் கொல்லப்பட்டனர். இப்படுகொலைகள் இடம்பெற்ற வேளை இச்சிறைச்சாலையில் மொத்தம் 137 தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இப்படுகொலை நடந்த வேளையில் சிறை அதிகாரிகள் சிங்களக்கைதிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை அவர்களே தமிழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த வார்ட்னு சிறையின் கதவை சிங்களக்கைதிகளுக்கு திறந்து விட்டு உதவினர். சிறை அதிகாரிகள் முன்பாகவே தமிழர்கள் மூவரும் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர் படுகொலை செய்யப்பட்ட 3 தமிழர்களும் தமிழ் அரசியல் கைதிகள்.

### பிந்துனுவெவ தடுப்பு முகாம் படுகொலை

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரணதுங்க ஆட்சியில் 25-10-2000 அன்று மத்திய மாகாணத்தில் பண்டாரவளையில் இருந்த பிந்துனுவெ என்ற இடத்தில் இருந்த தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 27 பேர் சிங்களக் காடையர் கும்பலினால் வெட்டியும் குத்தியும் அடித்தும் எரித்தும் படு கொலைசெய்யப்பட்டனர். அன்று அதிகாலையில் தடுப்பு முகாமின் சுற்றுப் புறத்தில் இருந்த சிங்களக் கிராம காடையர்கள் நூற்றுக்கணக்கானோர் கத்திகள், வாள், பொல்லுகள் எடுத்துக்கொண்டு தடுப்பு முகாமிற்குள் நுழைந்து அங்கு உறக்கத்தில் ஆழ்ந்திருந்த தமிழ் இளைஞர்களை வெட்டிக் கொன்றனர். சிலர் உயிருடன் எரிக்கப்பட்டனர். இக் கொடூர சம்பவத்திற்கு முதல் நாளே அம்முகாமில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் அங்கிருந்து அகற்றப்பட்டிருந்தனர். இதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. அத்துடன் படுகொலைகள் இடம்பெற்ற பொழுது பாதுகாப்பிற்கென நிறுத்தப்பட்டிருந்த பொலிஸார் அதனைத் தடுப்பதற்கு எந்த வித முயற்சியும் எடுக்கவில்லை.

### வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சியில் 09-11-2012 வெலிக்கடை சிறைச்சாலைக்குள் சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருள் சோதனையின் போது கைதிகளுக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும்இடையே ஏற்பட்ட மோதலில். கைதிகள் 27 பேர் கொல்லப்பட்டனர். இதில் பெரும்பான்மையானோர் சிங்களக் கைதிகள்.

### மகர சிறைச்சாலை படுகொலை

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச ஆட்சியில் 29-11-2020 மற்றும் 30-11-2020 ஆகியதினங்களில் மகர சிறைச்சாலையில் கொரோனா தொற்று பரவலுக்கு மத்தியில், கைதிகள் தங்களுக்கு PCR பரிசோதனை மற்றும் பாதுகாப்பு கோரி நடத்திய போராட்டம் வன்முறையாக வெடித்தது. இதில் சிறைக் காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் தீவைப்பால் 11 கைதிகள் பேர் கொல்லப்பட்டனர். அனைவரும் சிங்களக் கைதிகள்.

### நீர்கொழும்பு சிறைச்சாலை படுகொலை

இவ்வாறு தொடராக சிறைச்சாலைகளில் வன்முறைகள், படுகொலைகள் இடம்பெற்று வந்த நிலையில்தான் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சியில் கடந்த 05-07-2026 மற்றும் 06-07-2026 ஆகிய இரு தினங்கள் சிறைச்சாலைக்குள் இரண்டு போதைப்பொருள் கடத்தல் கும்பல்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல், பின்னர் பெரும் சிறைக்கலவரமாகவெடித்ததில் துப்பாக்கிச் சூடு மற்றும் கத்தி, வாள் வெட்டுக்களினால் 8 சிறை அதிகாரிகளும் 22 கைதிகளும் என 30 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் அதிகளவானோர் சிங்களக்கைதிகள், சிறை அதிகாரிகள்.

### இதுவரை இலங்கைச் சிறைகளில் படுகொலைகளுக்குள்ளான 83 தமிழரும் 68 சிங்களவரும்

1983 ஆம் ஆண்டிலிருந்து 2026 ஆம் ஆண்டு வரை இலங்கையில் 6 சிறைச்சாலைப் படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. இதில் 1983, 1997 மற்றும் 2000 ஆகிய ஆண்டுகளில் நடந்த சிறைச்சாலைப்படுகொலைகள் முற்றிலும் இன ரீதியானவை மற்றும் தமிழ் கைதிகளை இலக்கு வைத்தவை. இந்த இனரீதியிலான தாக்குதல்களில் 83 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 2012, 2020 மற்றும் சமீபத்திய 2026 சம்பவங்கள் சிறை நிர்வாகக் குறைபாடுகள், போதைப்பொருள் கும்பல் மோதல்கள் மற்றும் கைதிகளின் கிளர்ச்சிகள் காரணமாக ஏற்பட்டவை. இதில் 68 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களில் 8 பேர் சிறை அதிகாரிகள். பலியானவர்களில் அதிகளவானோர் சிங்களவர்கள்.

இலங்கை வரலாற்றில் சிறைச் சாலைகளுக்குள் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிரான வன்முறைகள் படுகொலைகள் இடம்பெற்றபோது பொலிஸார், சிறைக்காவலர்கள் மற்றும் ஆயுதப்படையினர் உயிரிழந்த, காயமடைந்த சம்பவங்கள் இல்லை. ஏனெனில் இவர்களின் ஆதரவுடனேயே தமிழ் அரசியல் கைதிகள் மீதான வன்முறைகள், படுகொலைகள் இடம்பெற்றன. ஆனால் வெலிக்கடை, மகர, நீர்கொழும்பு சிறைச்சாலைகளுக்குள் சிங்களக் கைதிகளுக்கிடையிலான வன்முறைகளின்போது அவற்றை கட்டுப்படுத்த முயன்ற 7 சிறை அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளதுடன் 40க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.



(தொடர்ச்சி 15 பக்கம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடமாகாணக் கல்வி அழிக்கப்படுவது தொடர்பாக பாராளுமன்றத்தில் அம்பலப்படுத்திய கஜேந்திரகுமார் எம்.பி!

## அவர் ஆற்றிய உரையில் அடங்கியுள்ள ஆணித்தரமான விடயங்கள்!



வடமாகாணத்தில் சேவையின் தேவை கருதி இடமாற்றம் என்ற பெயரில் கல்வியை மோசமாகப் பாதிக்கும் வகையில் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இடமாற்றங்கள் பின்வரும் சந்தர்ப்பங்களிலேயே மேற்கொள்ள முடியும்,
1. வருடாந்த இடமாற்றம்
2. சேவையின் அவசிய தேவை (Exigencies of service)
3. ஒழுக்காற்று நடவடிக்கை
ஆகிய தருணங்களிலேயே இடமாற்றம் மேற்கொள்ள முடியும்.

சேவையின் அவசிய தேவை (நுஒபைநெஉநைள ழக ளநசஎஉைந) கருதிய இடமாற்றம் கீழ்வரும் மூன்று சந்தர்ப்பங்களிலேயே மேற்கொள்ளப்பட முடியும்.
- ஒரு ஆசிரியரது தேவை மிக அவசரமாகத் தேவையடுமிடத்தில்
- குறித்த ஆசிரியரது சேவையே குறித்த பாடசாலைக்குத் தேவைப்படுமிடத்து
- ஒரு ஆசிரியரை குறித்த நிலையத்தில் வைத்திருப்பதால் அவரால் பிரச்சினை வளர்கிறது.
என்னும் நிலை இம் மூன்று காரணம் இருந்தால் மட்டுமே மேற்கொள்ள முடியும்.

ஆனாலும் வடக்கு மாகாண கல்வி அதிகாரிகளால் ஆசிரியர் தொழிற் சங்கங்களுடனான கலந்துரையாடலோ, அச்சங்கங்களின் பங்களிப்புகளோ இன்றி, பெருந்தொகை ஆசிரியர்களுக்கு வடமாகாண கல்வி அதிகாரிகளால் "சேவையின் தேவை கருதிய இடமாற்றம்" என்ற அடிப்படையில் 193 ஆசிரியர்களுக்கு ஜனநாயக விரோதமானதும், சர்வாதிகாரமான முறையிலும் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்வாறு பாராளுமன்றத்தில் உரையாற்றிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் IIi பிரிவு 3.3 இன் பிரகாரம் "இடமாற்றத்தக்க 25 அல்லது அதனிலும் கூடிய தொகையினரைக் கொண்ட பணியாளர்கள் உள்ள ஒவ்வொரு திணைக்களத்திலும் இடமாற்றச்சபை ஒன்றோ அதற்கு மேற்பட்டனவோ நிறுவப் படவேண்டும்" என்று 2013.07.03ம் திகதிய 1817/30ம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் 188வது பிரிவில் தெளிவாக வரையறுக் கப்பட்டுள்ளது.

அத்துடன் - இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2310/29ம் இலக்க 2022.12.14ம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் பிரிவு 259 இல் "அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் சேவையின் அவசர தேவைகளின் பெயரில் இடமாற்றம் செய்யப்படும் முன்னர் தத்துவங்கள் கையளிக்கப்பெற்ற அதிகாரி அல்லது நியமிப்பு செய்யும் அதிகாரி அத்தகைய தேவையொன்று பிரிவு 258 இல் குறிப் பிட்டுள்ளதற்கிணங்க, உண்மையிலேயே எழுந்துள்ளது எனவும், அந்த இடமாற்றம் அடுத்த வருடாந்த இடமாற்றங்கள் செய்யப்படும் வரையில் பிற்போடமுடியா தெனவும் தனிப்பட்ட முறையில் திருப்தியுறுதல் வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளது.

இலங்கை சனநாயக குடியரசின் 1817/30 இலக்க 2013.07.03ம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் வடக்குமாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் பிரிவு 208 இலும் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், பிரிவு 185 ல் குறிப்பிட்டுள்ள வகைப்படுத்தப்பட்டுள்ள இடமாற்ற வகை (i) இல் குறிப்பிட்டவாறு "வருடாந்தம் செய்யப்படும் இடமாற்றங்கள்" என்ற வகைக்குள்ளேயே குறித்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

2025 ஆம் ஆண்டு வடமாகாண ஆளுநரால் 25ற்கும் மேற்பட்ட இடமாற்றங்கள் இடமாற்ற சபையின் தீர்மானத்தை மீறி தன்னிச்சையாக நிறுத்தப்பட்டிருந்தன.

ஏற்கனவே வெளிமாவட்ட சேவைக்கு ஒத்த தீவகம், வடமாராட்சி கிழக்கு போன்ற பகுதிகளில் பணியாற்றியோருக்கு இடமாற்றச் சபை கூட்டப்படாமல் சட்டவிரோதமான 2026 இல் தன்னிச்சையாக இடமாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மேலும், வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட்ட பல ஆசிரியர்களை குறித்த பாடசாலைகளிலிருந்து வடமாகாண கல்வி அதிகாரிகள் இன்னும் விடுவிக்கவில்லை.

சேவையின் தேவை கருதிய இடமாற்றத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் மேன்முறையீடுகளின் பரிசீலனையும் அரசியல்தலையீடு, பாரபட்சங்கள், பழிவாங்கல் எண்ணம் கொண்ட வகையிலேயே வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம், பாதிக்கப்பட்ட பல ஆசிரியர்களின் அடிப்படை உரிமைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு, ஆசிரியர்களினதும், அவர்களை தங்கிவாழ்வோரதும் வாழும் உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் முறையற்ற மேன்முறையீட்டு செயற்பாடுகளாவன:
1. வடமாகாண இடமாற்ற கொள்கையின் பிரிவு 4.4 ஐ மீறி ஆசிரியர்களை பழிவாங்கியமை
2. 2025 ஆம் ஆண்டு வரை வெளிமாவட்டத்துக்கு ஒத்த சேவையாக தீவகம், வடமராட்சி கிழக்கு, வெளிமாகாண சேவைக்காலம் என்பன இடமாற்ற சபை தீர்மானமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ள போதும், வெளிமாவட்ட சேவைக் கொத்த சேவையாற்றிய ஆசிரியர்கள் சிலர் மட்டும் பழிவாங்கப்பட்டுள்ளமை.
3. பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் வெளிமாவட்ட சேவைக்கொத்த சேவைகளை 6 வருடங்களுக்கும் அதிகமாக பூர்த்தி செய்துள்ளதோடு, பலரால் மருத்துவ ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையிலும், ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தமைக்காக பழிவாங்கப்பட்டுள்ளமை.
4. ஆங்கில மொழி மூல பாடங்களை கற்பிக்கும் சேவையின் தேவை இடமாற்றம் வழங்கப்பட்ட மாவட்ட பாடசாலைகளுக்கு தேவையற்றுள்ள நிலையில், தற்போதைய நிலையங்களில் ஆங்கில மொழி மூலம் கற்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களை சேவையின் தேவை இடமாற்றம் என்ற போர்வையில் பழிவாங்கியுள்ளமை. இதன் மூலம் குறித்த ஆசிரியர்களிடம் கற்கும் மாணவர்களின் உரிமையும் பாதிக்கப்பட்டுள்ளது.
5. வெளிமாவட்ட சேவைக்கொத்த சேவையாக கருதப்பட்டு வந்த தீவக வலயத்தில் 6 வருடங்களுக்கு அதிகமாக பணியாற்றிய ஆசிரியர்களுக்கு வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளபோதும், ஒருபோதும் வெளிமாவட்ட சேவையோ அல்லது வெளிமாவட்டத்துக்கு ஒத்த சேவையோ ஆற்றியராதவர்களுக்கு தீவக வலயத்துக்கு இடமாற்றம் வழங்கியுள்ளமை பாரபட்சமானதாகும்.

வடமாகாண கல்வி அதிகாரிகள், வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடமாகாண ஆளுநர் உள்ளிட்டோரின் சட்டவிரோத செயற்பாடுகளால் ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாது அவர்களை தங்கி வாழ்வோருக்கும் ஏற்படுத்தப் பட்டுவரும் / ஏற்படப்போகும் மிக மோசமான அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பில் மிக அவசரமாக தலையீடு செய்து நீதியை நிலைநாட்ட வேண்டும்" எனவும் அவர் அநுர குமாரவின் அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

(8ம் பக்கம் தொடர்ச்சி)

ஆண்:
அவன் தேடிய செல்வங்கள் வேற இடத்திலே
சேர்வதினால் வரும் தொல்லையடி
பெண்:
பஞ்சப் பரம்பரை வாழ்வதற்கு - இனி
பண்ண வேண்டியது என்ன மச்சான்?
ஆண்:
தினம் கஞ்சி கஞ்சி என்றால் பானை - நிறையாது
சிந்திச்சு முன்னேற வேணுமடி
பெண்:
வாடிக்கையாய் வரும் துன்பங்களை - இன்னும்
நீடிக்கச் செய்வது மோசமன்றோ?
ஆண்:
இருள் மூழ்கிக் கிடந்த மனமும் வெளுத்தது
சேரிக்கும் இன்பம் திரும்புமடி
பெண்:
நல்லவர் ஒன்றாய் இணைந்து விட்டால் - மீதம்
உள்ளவரின் நிலை என்ன மச்சான்?
ஆண்:
நாளை வருவதை எண்ணி - அவர்
நாழிக்கு நாழி தெளிவாரடி
பெண்:
அட காடு விளைஞ்சென்ன மச்சான் - நமக்கு
கையுங் காலுந்தானே மிச்சம்?
ஆண்:
நானே போடப் போறேன் சட்டம் - பொதுவில்
நன்மை புரிந்திடும் திட்டம்
நாடு நலம் பெறும் திட்டம்

இவ்வரிகளைக் கேட்ட எம்ஜிஆர், தனது எதிர்காலக் கனவான தமிழ்நாடு முதலமைச்சர் பதவி நனவாகி வருவதாக உணர்ந்தாரென பிற்காலத்தில் கூறினார். இப்பாடலின் இவ்வரிகளையே எம்ஜிஆர் 1981ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சரானபோது தனது அரசின் கொள்கையாகப் பிரகடனப்படுத்தியதோடு மட்டுமல்ல, நிருபர்கள் கேட்டபோது, எனது முதலமைச்சர் நாற்காலியின் மூன்று கால்கள் எப்படி வந்தன என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான்காவது கால் தம்பி பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்களால்தான் வந்தது என்று கூறி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தைப் பெருமைப்படுத்தினார்.
இது மட்டுமல்ல. பட்டுக்கோட்டையின்,
"திருடாதே பாப்பா திருடாதே
வறுமை நிலைக்குப் பயந்துவிடாதே
திறமை இருக்கு மறந்துவிடாதே"
என்னும் பாடலில் தனது பொதுவுடைமைத் தத்துவத்தைப் பின்வரும் வரிகளில் முத்திரையாகப் பதித்து மக்கள் இடத்தில் எம்ஜிஆரின் புகழைப் பரவச் செய்கிறார்.
"கொடுக்கிற காலம் நெருங்குவதால் - இனி
எடுக்கிற அவசியம் இருக்காது
இருக்கறதெல்லாம் பொதுவாய்ப் போனால்
பதுக்கிற வேலையும் இருக்காது
ஒதுக்கிற கவலையும் இருக்காது
உழைக்கிற நோக்கம் உறுதியாயிட்டா
கெடுக்கிற நோக்கம் வளராது - மனம்
கீழும் மேலும் வளராது
என்னும் பாடல் மூலம் மக்கள் மத்தியில் எம்ஜிஆரின் புகழை மட்டுமல்ல, அவரை ஒரு பொதுவுடைமைவாதியாகவும் உயர்த்தினார்.
இன்னொரு பாடலான "தூங்காதே தம்பி தூங்காதே"
தூங்காதே தம்பி தூங்காதே
தூங்காதே தம்பி தூங்காதே
நீயும் சோம்பேறி என்ற பெயர் வாங்காதே
நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன் தானுங்கெட்டார்
சிலர் அல்லும் பகலும் தெருக்கல்லாயிருந்துவிட்டு
அதிர்ஷ்டமில்லையென்று அலட்டிக் கொண்டார்
விழித்துக் கொண்டோரெல்லாம் பிழைத்துக்கொண்டார்
உன்போல் குறட்டை விட்டோரெல்லாம் கோட்டைவிட்டார்
இன்னும் பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால்
பல பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா
இப்பாடலின் மூலம் சோம்பலின் கெடுதியைக் கூறுகின்றார்.

(அடுத்த வாரம் தொடரும்...)

*(13 பக்கம் தொடர்ச்சி)*

# *இலங்கைச் சிறைச்சாலைகளில் தொடரும் படுகொலைகள்!*

## சிறைகளும் கைதிகளும்

இலங்கையில் சிறைச்சாலைகள், விளக்கமறியல் சிறைகள், திறந்தவெளி முகாம்கள் மற்றும் தற்காலிக தடுப்புக்காவல் நிலையங்கள் என மொத்தம் 60 சிறைச்சாலைகள் உள்ளன. இந்த சிறைச்சாலைகளில் 11,762 கைதிகளை வைத்திருக்கவே இடமுள்ள போதும், தற்போது இங்குள்ள சிறைச்சாலைகளிலுள்ள மொத்தக் கைதிகள் எண்ணிக்கை சுமார் 42,034 பேர். இதில் விளக்கமறியல் கைதிகள் சுமார் 31,031 பேர் (இது மொத்த எண்ணிக்கையில் 73.8% ஆகும். அதாவது தண்டனை பெற்றவர்களை விட வழக்கின் தீர்ப்புக்காகக் காத்திருப்பவர்களே சிறைகளில் அதிகம்). தண்டனை பெற்ற கைதிகள் சுமார் 11,003 பேர் உள்ளனர். இந்த சிறைச்சாலைகளில் ஆண் கைதிகள்: சுமார் 39,789 பேர் (94.7%)பெண் கைதிகள்: சுமார் 2,245 பேர் (5.3%) என்ற வகையில் உள்ளனர்.

இதேவேளை இலங்கையில் 1976 ஆம் ஆண்டிற்குப் பிறகு மரணதண்டனை நடைமுறையில் நிறைவேற்றப்படவில்லை என்றாலும், நீதிமன்றங்களால் தொடர்ந்து மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. அவை பிற்காலத்தில் ஆயுள் தண்டனையாக மாற்றப்படுவது வழக்கம். இவ்வாறான நிலையில் இலங்கை சிறைச்சாலைகளில் மரணதண்டனைக் கைதிகளாக ஆண் கைதிகள் சுமார் 1,150 பேரும் பெண்கைதிகள் சுமார் 50 பேருமாக மொத்தம் 1,200 கைதிகள் மரணதண்டனைத் தீர்ப்புக்குள்ளாகி சிறையிலுள்ளனர். இதேவேளை ஆயுள்தண்டனைக் கைதிகளாக ஆண் கைதிகள் சுமார் 500 பேரும் பெண் கைதிகள்: சுமார் 20 பேருமாக 520 வரையிலான கைதிகள் ஆயுள்தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இலங்கை சிறைச்சாலைகளின் கடந்த 43 ஆண்டுகால (1983 - 2026) வரலாறு என்பது, தண்டனை பெற்ற அல்லது விசாரணைக் கைதிகளாக அடைக்கப்பட்ட மனிதர்களின் கதைகளைத் தாண்டி, நாட்டின் கட்டமைப்புச் சிதைவின் ஒரு வடிவமாகவே திகழ்கிறது. 1983 வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகள் போன்ற இன ரீதியிலான வன்முறைகள், நாட்டின் இனமுரண்பாடுகள் எத்தகைய உச்சகட்டப் பகையைச் சிறைச் சுவர்களுக்குள்ளும் விதைத்திருந்தன என்பதை நிரூபித்தன. மறுபுறம், அண்மைக்கால பத்தாண்டுகளில் உருவெடுத்துள்ள போதைப்பொருள் கடத்தல் குழுக்களின் வன்முறைகளும், படுகொலைகளும் சிறைச்சாலைகள் குற்றவாளிகளைத் திருத்தும் இடங்கள் அல்ல. மாறாக, அவை பாதாள உலகக் குழுக்களின் கட்டுப்பாட்டு அறைகளாகவும் அதிகாரப் போட்டி நடக்கும் களங்களாகவும் மாறியுள்ள கசப்பான உண்மையை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

சிறைகளுக்குள் நிகழும் இத்தகைய தொடர் வன்முறைகளும் படுகொலைகளும் வெறும் பாதுகாப்புக் குறைபாடுகள் மட்டுமல்ல. அவை நீதித்துறை, சிறைச்சாலை நிர்வாகம் மற்றும் அரசியல் பின்னணிகளுக்கு இடையே உள்ள ஆழமான முறைகேட்டுப் பிணைப்பின் வெளிப்பாடாகும். எனவே, வெறுமனே சுவர்களையும் பாதுகாப்புக் கெமராக்களையும் பலப்படுத்துவது மட்டும் இதற்கான தீர்வாக அமையாது. கைதிகளின் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், இன ரீதியிலான வெறுப்புணர்வுகளைக் கடந்து சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துதல், சிறை நிர்வாகத்தில் ஊழலை ஒழித்து போதைப்பொருள் மாபியாக்களின் பிடியிலிருந்து சிறைகளை மீட்பது போன்ற தீவிரமான சீர்திருத்தங்கள் இன்றியமையாதவை.

## வீணாவின் கவிக்கணை

கூன் குருடு செவிடு
என்று தன்னை தானே
தாழ்த்திக்கொள்ளாமல்,
அடுத்தவர் முன் துவண்டு
போகாமல், சுய தொழில்
செய்து மரியாதையுடன்
வாழ்ந்து வெற்றி பெறும்
நம் சகோதர சகோதரிகள்
இருக்கும் இவ்வுலகில்,
எல்லாத் தகுதியும்
கொண்ட உனக்கு மட்டும்
வாழ்வில் முன்னேறிச்
செல்ல என்ன தயக்கம்?








# ஈழத்திலிருந்து தமிழகத்தை நோக்கிய மற்றொரு அரசியல் விஜயம்!

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

---

**தமிழ்த் தேசியப் பேரவையின் அந்த அணிக்குள் காணப்படும் ஐங்கரநேசன் முன்பு வட மாகாண அமைச்சராக இருந்தவர். விஜயின் ஆதரவாளர்கள் தெருவில் ஓர் ஆர்ப்பாட்டம் செய்தபோது அந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த இளையவர்களை ஐங்கரநேசன் கடுமையாக விமர்சிக்கும் காட்சி சமூகஊடக வலைத்தளங்களில் பகிரப்பட்டது. இப்பொழுது மீண்டும் அந்தக் காணொளிகளைப் பகிர்ந்து முன்பு விஜயை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இப்பொழுது விஜயைக் கண்டு, மலர்க் கொத்துக் கொடுக்கிறார்கள் என்று விமர்சிக்கப்படுகிறது. இந்த விமர்சனங்கள் வெற்றிடத்தில் இருந்து வரவில்லை. அதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இறந்த காலம் ஒரு பிரதான காரணம். சில ஆண்டுகளுக்கு முன்புவரை அந்தக் கட்சி தன் அரசியல் எதிரிகளை இந்தியாவின் கருவிகள், இந்தியாவின் ஏஜென்ட்கள் என்றுதான் வருணித்தது. 13ஆவது திருத்தத்திற்கு எதிரான அதன் உரையாடல்கள் இந்திய எதிர்ப் பண்பை கொண்டவை. வெளியுறவுக் கொள்கை தொடர்பில் அவர்கள் மிகத் தெளிவாக இந்தியாவின் பிராந்திய மேலாண்மையை சுதாகரித்துப்போகும் ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நடைமுறை அரசியலில், மேடைப் பேச்சுகளில், மக்கள் சந்திப்புகளில் அக்கட்சியினர் தெரிவிக்கும் கருத்துக்கள் பெருமளவுக்கு இந்தியாவுக்கு எதிரானவைதான்.**

---

**த**மிழ்த் தேசியப் பேரவை தமிழகத்துக்குச் சென்றிருக்கிறது. அங்கே அவர்கள் தமிழக முதல்வரையும் எதிர்க்கட்சித் தலைவரையும் ஏனைய அரசியல் பிரமுகர்களையும் சந்தித்திருக்கிறார்கள். சில மாத கால இடைவெளிக்குள் தமிழ்த் தேசியப் பேரவையின் இரண்டாவது தமிழக விஜயம் இது. தமிழக தேர்தலுக்கு முன் அவர்கள் தமிழகம் சென்றார்கள். இப்பொழுது புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் போயிருக்கிறார்கள். தேர்தலுக்கு முன் போனபோது அவர்கள் விஜயைக் கண்டிருக்கவில்லை. அதனாலோ என்னமோ விஜய் ஆட்சிக்கு வந்த கையோடு அவரைச் சென்று கண்டிருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியப் பேரவையின் அந்த அணிக்குள் காணப்படும் ஐங்கரநேசன் முன்பு வட மாகாண அமைச்சராக இருந்தவர். விஜயின் ஆதரவாளர்கள் தெருவில் ஓர் ஆர்ப்பாட்டம் செய்தபோது அந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த இளையவர்களை ஐங்கரநேசன் கடுமையாக விமர்சிக்கும் காட்சி சமூகஊடக வலைத்தளங்களில் பகிரப்பட்டது. இப்பொழுது மீண்டும் அந்தக் காணொளிகளைப் பகிர்ந்து முன்பு விஜயை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இப்பொழுது விஜயைக் கண்டு, மலர்க் கொத்துக் கொடுக்கிறார்கள் என்று விமர்சிக்கப்படுகிறது.

இந்த விமர்சனங்கள் வெற்றிடத்தில் இருந்து வரவில்லை. அதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இறந்த காலம் ஒரு பிரதான காரணம். சில ஆண்டுகளுக்கு முன்புவரை அந்தக் கட்சி தன் அரசியல் எதிரிகளை இந்தியாவின் கருவிகள், இந்தியாவின் ஏஜென்ட்கள் என்றுதான் வருணித்தது. 13ஆவது திருத்தத்திற்கு எதிரான அதன் உரையாடல்கள் இந்திய எதிர்ப் பண்பை கொண்டவை. வெளியுறவுக் கொள்கை தொடர்பில் அவர்கள் மிகத் தெளிவாக இந்தியாவின் பிராந்திய மேலாண்மையை சுதாகரித்துப்போகும் ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நடைமுறை அரசியலில், மேடைப் பேச்சுகளில், மக்கள் சந்திப்புகளில் அக்கட்சியினர் தெரிவிக்கும் கருத்துக்கள் பெருமளவுக்கு இந்தியாவுக்கு எதிரானவைதான். குறிப்பாக தங்கள் எதிரிகளை இந்தியாவின் கருவிகள் என்று சித்தரிக்கும்போது அங்கே இந்தியா ஒரு பொது எதிரியாகக் கருதப்படுகிறது என்று எடுத்துக்கொள்ளலாம்.

இவ்வாறான இறந்த காலத்தைக் கொண்டு ஒரு கட்சியானது, மிகக்குறுகிய கால இடைவெளிக்குள் தமிழகத்துக்கு சென்று தமிழக தலைவர்களை சந்தித்து இருக்கிறது. இறந்த காலத்தில் அவர்களுடைய நிலைப்பாடுகள் எதுவாகவும் இருக்கலாம். நிகழ்காலத்தில், விஜய் இப்பொழுது தமிழக மக்களின் தெரிவு. எனவே தமிழக மக்கள் வழங்கிய ஆணையை ஏற்றுக்கொண்டு விஜயுடன் இடையூடாடுவது தவிர்க்க முடியாதது. அரசியல் என்பது சாத்தியக் கூறுகளின் கலை. இருப்பவற்றின் அடிப்படையில்தான் சாத்தியக்கூறுகள் காணப்படும். இல்லாதவற்றின் அடிப்படையில் அல்ல. இந்த அடிப்படையில் சிந்தித்தால் தமிழ்த் தேசியப் பேரவையின் தமிழக விஜயம் சரியானது.

அதேசமயம் இந்த விஜயத்தின்போது தமிழ்த் தேசியப் பேரவை வெளியிட்ட அறிக்கைகளின் சாராம்சம் என்னவென்றால், 13ஆவது திருத்தமும் உட்பட ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட "எக்கிய ராஜ்ய" போன்ற தீர்வுகளை தமிழ்த் தேசியப் பேரவை நிராகரிக்கின்றது. அதேசமயம் முழு அளவு சமஸ்டியை ஒரு தீர்வாக முன்வைக்கின்றது. அதை நோக்கி இந்திய மத்திய அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்குமாறு தமிழகக் கட்சிகளை உந்தித் தள்ளுவதே பேரவையின் இரண்டு தமிழக விஜயங்களினதும் நோக்கம்.

ஆனால், தமிழ்த் தேசியப் பேரவைச் சந்தித்த தமிழக முதல்வர் ஒரு முழுச் சமஸ்டி கட்டமைப்பின் முதல்வர் அல்ல. அவர் அரைச் சமஸ்டிக் கட்டமைப்பின் முதல்வர்தான். இந்திய




அரசியலமைப்பானது அரைச் சமஸ்டிக் கட்டமைப்புத் தான். அதைவிட முக்கியமாக, மோடி அரசாங்கம் காஷ்மீரியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த தனிச்சிறப்பு உரிமைகளையும் அகற்றிய ஓர் அரசாங்கம் என்பதை இங்கு குறிப்பாகக் கவனிக்கவேண்டும். எனவே தன்னுடைய நாட்டுக்குள் தன்னுடைய மக்களுக்கு, தான் வழங்காத ஒரு முழுச் சமஸ்டிக் கட்டமைப்பை, ஈழத் தமிழர்களுக்கு வழங்கவேண்டும் என்று கொழும்பில் உள்ள அரசாங்கத்தின் மீது இந்திய மத்திய அரசு அழுத்தங்களைப் பிரயோகிக்க வைக்க என்ன செய்யவேண்டும்?

இந்திரா காங்கிரஸ் மட்டுமல்ல, இப்போதுள்ள பாரதிய ஜனதாவின் அரசாங்கமும் அதன் இரண்டு ஆட்சிகளின்போதும் 13ஆவது திருத்தத்தைக் கடந்து கதைக்கவில்லை. ஐநாவில் இந்தியப் பிரதிநிதிகள் 13ஆவது திருத்தத்தைக் கடந்து உரை நிகழ்த்தவில்லை. கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக இந்திய மத்திய அரசாங்கம் 13 ஐத்தான் ஈழத் தமிழர்களுக்கு தீர்வாக முன்நிறுத்தி வருகிறது.

அதுமட்டுமல்ல, அதைவிட முக்கியமானது, இலங்கைத் தீவில் இப்பொழுது நடைமுறையில் இருப்பது இந்திய - இலங்கை உடன்படிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தம் அல்ல. அந்த 13ஆவது திருத்தத்தின் உள்ளுடன் பெருமளவுக்குக் கோதி எடுக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது இருப்பது அனேகமாக தோல் இருக்கச் சுளை பிடுங்கப்பட்ட ஒரு மாகாண சபைதான். இந்த விடயத்தில் கடந்த 17 ஆண்டுகளாக 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று கூறி கொழும்பின் மீது டெல்லி பயன்பொருத்தமான நிர்ணயகரமான அழுத்தங்கள் எதையும் பிரயோகித்திருக்கவில்லை என்பதையும் இங்கு ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

இப்படிப்பட்டதோர் பின்னணிக்குள்தான், தமிழ்த் தேசியப் பேரவையின் தமிழக விஜயம் இடம்பெற்றிருக்கிறது. கடந்த 17 ஆண்டுகளாக ஈழத் தமிழர்களுக்காக தமிழகம் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய அளவுக்கு கொந்தளிக்கவில்லை. ஐநா கூட்டத் தொடர்களின்போது, ஐநா தீர்மானங்களில் இந்தியா செல்வாக்குச் செலுத்த வேண்டும் என்று கேட்டு மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் தமிழகம் கொந்தளித்திருக்கவில்லை. சில குறிப்பிட்டுச் செல்லக்கூடிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றிருக்கின்றன. என்றாலும்கூட யுத்த காலத்தில் ஈழத் தமிழர்களுக்காக நொதித்த அளவுக்கு, கொந்தளித்த அளவுக்கு கடந்த 17 ஆண்டுகளாக தமிழகம் கொந்தளிக்கவில்லை. சீமானாலும் அதைச் செய்ய முடியவில்லை. இப்படிப்பட்டதோர் பின்னணியில் மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் தமிழகத்தை எப்படிக் கொந்தளிக்க வைப்பது?

இந்த இடத்தில்தான் ஈழத் தமிழர்கள் தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டிய ஒரு கேள்வி இருக்கிறது. அது என்னவென்றால், ஈழத் தமிழர்கள் தங்களுடைய அரசியல் இலக்குகளுக்காகத் தாங்களே கொந்தளிக்காதபோது அயலில் உள்ள தமிழகம் கொந்தளிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியா?

கடந்த 17 ஆண்டுகளிலும் ஈழத் தமிழர்கள் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய விதத்தில் "பொத்துவில் தொடக்கம் பலி கண்டி" வரையான பேரணி, "எழுக தமிழ்"கள், சில எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்றவற்றில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் இந்தப் போராட்டங்கள் யாவும் தெட்டம் தெட்டமானவை, தொடர்ச்சியானவை அல்ல. தமது அரசியல் உரிமைகளுக்காக கொழும்புக்கு நோகக்கூடிய விதத்திலும், வெளியுலகத்தை ஈர்க்கத் தக்க விதத்திலும் ஈழத்தமிழ் அரசியல் கொந்தளிக்கவில்லை என்பதுதான் கடந்த 17 ஆண்டு கால யதார்த்தம் ஆகும். இவ்வாறு தங்களுக்காகத் தாங்களே நொதிக்க முடியாத ஒரு மக்கள் கூட்டம், கொந்தளிக்க முடியாத ஒரு மக்கள் கூட்டம், தமிழகம் தங்களுக்காக நொதிக்க வேண்டும், கொந்தளிக்க வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்கலாம்?

எனவே இப்பொழுது தெளிவான ஒரு சித்திரம் கிடைக்கின்றது. தமிழகம் கொந்தளித்தால்தான் இந்திய மத்திய அரசாங்கத்தின் முடிவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். தமிழகம் கொந்தளிப்பது என்றால் அதற்கு முதல் ஈழத்தமிழ் அரசியல் கொந்தளிக்க வேண்டும். ஆனால் தமிழ் மக்களை நமது சொந்த அரசியலின் மீது உணர்திறன் மிக்கவர்களாக, நொதிக்கும் ஒரு மக்கள் கூட்டமாகத் தொடர்ந்து பேண தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளால் கடந்த 17 ஆண்டுகளாக முடியவில்லை என்பதுதான் கசப்பான கொடுமையான யதார்த்தம் ஆகும்.

ஒரு மக்கள் கூட்டத்தை அரசியல் மயப்படுத்துவது, சித்தாந்த மயப்படுத்துவது, இலட்சிய மயப்படுத்துவது, ஒரு கட்சியாக அல்லது மக்கள் இயக்கமாக ஸ்தாபனமயப்படுத்துவது... போன்ற விடயங்களில் இதுவரை காலமும் இருந்து வந்த பாரம்பரிய நம்பிக்கைகள் பலவற்றை நடிகர் விஜயினுடைய வெற்றி தகர்த்திருக்கிறது. அரசியல் மயப்படுத்துதல், ஸ்தாபன மயப்படுத்துதல், கருத்துருவாக்கம்...போன்ற விடயங்களில் பாரம்பரியமாக இருந்துவந்த நம்பிக்கைகள் பல தகர்ந்து கொண்டிருக்கும் ஒரு காலம். கைபேசியின் கைதியாக உள்ள ஒரு தலைமுறையின் பார்வைப் புலத்துக்குள் தமிழ்த் தேசிய அரசியலோ தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளோ எந்த அளவுக்கு வீரியமாக, கவர்ச்சியாக உள்ளார்கள்?

ஒரு தலைமுறை விரும்பி ரசிக்கும் விடயப் பரப்புகளுக்குள், ஒரு தலைமுறை தொடர்ச்சியாகப் பார்க்கும் விடயப் பரப்புகளுக்குள், ஒரு தலைமுறை தங்கள் நட்பு வட்டாரத்துக்குள் விரும்பிப் பகிரும் விடயப் பரப்புகளுக்குள், தமிழ்த் தேசிய அரசியல் உரையாடல் பலமாக உண்டா? தமிழ்க் கட்சிகள் எம்ஜிஆர் காலத்துக்குக் கோ'ங்களோடு விஜய்யினுடைய காலத்தைக் கையாள முடியுமா? அல்லது எம்ஜிஆரின் காலத்து அணுகுமுறைகளோடு விஜயினுடைய காலத்து அரசியலை அணுக முடியுமா?

நாங்கள் எல்லாரும் பயன்படுத்துவது அப்டேட் செய்யப்பட்ட கைபேசிகளை. எங்களுடைய கணினிகள் அப்டேட் செய்யப்பட்டவை. எங்களுடைய வீடுகளில் வரவேற்புறையில் அல்லது வீட்டின் மையத்தில் உள்ள தொலைக்காட்சிகள் அப்டேட் செய்யப்பட்டவை. எமது குசினிகளில் காணப்படும் இலத்திரனியல் பொருட்கள் அப்டேட் செய்யப்பட்டவை. அதாவது நாங்கள் பயன்படுத்தும் அ·.றிணைகள் பெரும்பாலானவை அப்டேட் செய்யப்பட்டவை.ஆனால் உயர்திணைகளாகிய நாங்கள் எங்களுடைய அரசியலை, கிட்டத்தட்ட 75 ஆண்டுகளுக்கு மேலான அரசியலை, எந்தளவுக்கு அப்டேட் செய்து வைத்திருக்கிறோம்? ஆகக் குறைந்தது கடந்த 17 ஆண்டு காலப் பரப்புக்குள்ளாவது அதனை அப்டேட் செய்ய வேண்டிய காலத்தில் அப்டேட் செய்திருக்கின்றோமா?

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்
1204



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## திருநந்தீஸ்வரம்
## இரத்மலானை, கொழும்பு

*" பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்*
*கண்ணிடை மணியொப்பாய் கடுவிருள் சுடரொப்பாய்*
*மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே*
*விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே. "*

நந்தியின் உருவம் இடபத்தின் உருவத்தை ஒத்ததாகக் காணப்படும். சிவன் சந்நிதியிலே அமர்ந்து காவல் செய்வது நந்தியின் பணியாகக் கூறப்பட்டுள்ளது. தேவர்கள் இறைவனைக் காண திருக்கைலாயம் சென்ற வேளையிலே நந்தியின் அனுமதி பெற்றே உள்ளே சென்றதாகப் புராணங்களிலே கூறப்பட்டுள்ள செய்தி, திருநந்திதேவரின் பெருமையை உணர்த்துவதாகக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையே திருக்கோயில்களிலும் காணப்படுகின்றது. நந்தி கணங்களுக்குத் தலைவன். வித்தியுன்மாலி என்னும் அரக்கனுக்கெதிராக கணங்களின் படைக்குத் தலைமை தாங்கி, அணிவகுத்துச் சென்றதையும் புராணங்கள் கூறியுள்ளன. வீரகன் உமையினால் மைந்தனாகக் கருதப்பட, அவரே நந்தியானதாகப் புராணங்களிலே மற்றுமொரு செய்தி கூறப்பட்டுள்ளது.

நந்தி கணங்களின் தலைமைப்பதவியை வகிக்குமுன், சிலாதர் என்பவர்க்குப் புத்திரராய்ப் பிறந்து, வேதங்களிலே வல்லவராகி சிவபக்தி மேலிட்டு, சிறுபிராயத்திலேயே கடுந்தவம் புரிந்துள்ளார். நந்தியின் பக்தியை மெச்சிய இறைவன், அவர் வேண்டியவாறு சிவபக்தியை அவரிடம் பெருகச் செய்தார். மீண்டும் மீண்டும் தவம் செய்து இறைவனிடம் வரமாகச் சிவபக்தியே வேண்டுமெனக் கோரினார். இறைவனும் அவரது உள்ளன்பை மெச்சி, தன் கணங்களுக்குத் தலைவனாக நியமித்தார் ஆகமங்களையும், சிவதருமம், சிவஞானம், ஆகியவற்றையும், மணிகங்கணண் என்பவனது வேண்டுகோட்கிணங்கி அவனுக்குப் போதித்த வரலாற்றை இலிங்கபுராணம் கூறியுள்ளது. சிவாகமங்களிலே திருநந்திதேவர்க்குரிய தேர்ச்சியினையே இப்புராணம் எடுத்துரைக்கின்றது. இவ்வாறாக புராணங்களால் போற்றப்பட்டுள்ள திருநந்திதேவர் சிவாலயத்திலே முக்கிய இடத்தைப் பெற்றுள்ளார்.

இவ்வாறான பெருமைமிக்க திருநந்தீஸ்வரம் சிவாலயமே கொழும்பிலுள்ள இரத்மலானைப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேசத்திலுள்ள கொனா கோயில என்பது ஊரின் பெயராகும். இங்குள்ள முருகன் கோயிலை கொனாபந்தி கதரகம தேவாலய என்று சிங்களத்திலே குறிப்பிடுகின்றார்கள். கோயில் என்பது தூய தமிழ்ச் சொல். கொனா என்று சிங்களத்திலே காளைமாட்டை அதாவது எருதைக் குறிப்பர். கொனா கோயில என்பதை நேரடியாகத் தமிழ்ப்படுத்தினால், எருதுக் கோயில் எனப் பொருள்படும். கொனா கோயில என்று குறிப்பிட்ட இடத்திலே மிகப் பெரிய சிவாலயம் இருந்துள்ளது. அதனை கி.பி 1519 ஆம் ஆண்டு போத்துக்கேயர் இடித்துள்ளனர் இவற்றிற்கான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இரத்மலானைப்பிரதேசத்தில் சிவாலயம் இருந்தமைக்கான வரலாற்றுச் சான்றுகளோடு, இலக்கியக் குறிப்புக்களும் இச்சிவாலயம் பற்றிக் குறிப்பிட்டுள்ளன. கோட்டை இராசதானியை கி.பி 1415 தொடக்கம் 1467 வரை ஆறாம் பராக்கிரமபாகு என்னும் மன்னன் ஆட்சி செய்துள்ளான். இம் மன்னனின் மகளை உலகுடை தேவி, உலகுடை குமாரி என அழைப்பர். இப்பெயர் தமிழ்ப் பெயராகும். 6ஆம் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனான செண்பகப்பெருமாள் என்னும் புவனேகபாகு கிபி 1450- 1467 வரை யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்துள்ளான். இவனது ஆட்சிக்காலத்தில் யாழ்பாணத்திலுள்ள நல்லூர் ஆலயம் திருத்தியமைக்கபட்டதென்பர்.

சிங்கள இலக்கியங்களிலே "சலலீஹினி சந்தேசய" என்னும் நூல் சிறப்புப்பெற்ற நூல்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இந்நூல் தமிழிலே குயில் விடுதூது அல்லது பூவை விடுதூது என்று அழைக்கப்படுகின்றது. பன்மொழிப் புலமை கொண்ட பௌத்த பிக்குவான ராகுல தேரர் என்பவர் இந்நூலினை 6 ஆம் பராக்கிரமபாகு காலத்திலே இயற்றியுள்ளார். இந்நூலிலே காணப்படும் பாடல்களில் மூன்று சிவாலயங்கள் குறிப்பிடப்பட்டு, அங்கு நடைபெறும் பூசை வழிபாடுகள்பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

6 ஆம் பராக்கிரமபாகுவின் மகளான உலகுடை குமாரி புத்திரபாக்கியம் வேண்டி களனியிலுள்ள விபீஷண தெய்வத்திடம் தூது அனுப்புவதாக அமைந்துள்ள பாடல்களில், போகும் வழியிலே தங்கிச் செல்ல வேண்டிய சிவாலயங்களையும், அங்கு நடைபெறும் பூசை, வழிபாட்டு முறைகளையும் மிக அழகுறத் தெளிவாகச் சிங்களமொழியிலே ராகுல தேரர் வெளிப்படுத்தியுள்ளார்..

ராகுல தேரரின் பாடல்களின் தமிழாக்கம் பின்வருமாறு அமைகின்றது. அகில், கற்பூரம், சாம்பிராணி போன்றவற்றிலிருந்து எழும் வாசனைப் புகையின் மத்தியிலே ஒளிர்கின்ற கொடிகளை உடையதும், மிகப்பெரிய மேளத்தினாலும், சங்குகளினாலும் எழுப்பப்படும் ஓசையுடன், காண்டாமணி ஓசையும் அத்தோடு மக்கள் மிகவும் விருப்புடன் தமிழ்மொழியில் பாடும் தோத்திரங்களால் மனதைக் கவரும் ஈஸ்வரன் கோயிலில் தங்கிச் செல்லவும் என்பது முதற்பாடலின் தமிழாக்கமாகும். அடுத்த பாடலிலே தேவதாசிப்பெண்களின் எடுப்பான மார்பகங்களில் பூசியிருக்கும் குங்குமப்பூ வாசனையைத் தழுவி, பறவைகளின் ஓசையுடன் சேர்ந்து இளந்தென்றல் வீசும்போது காலைப்பூசையில் ஐந்துவித இசைக்கருவிகள் ஒலிக்கப்படும். அப்பஞ்சதூர்ய நாதங்களைக் கேட்டு, சூரியன் உதயமாகும் வேளை நித்திரை விட்டெழவும் எனக் கூறப்பட்டுள்ளது. உதய பர்வதம் என்னும் தங்க விளக்குத் தூணில் பிரகாசிக்கும் விளக்குப் போன்ற சூரியன் உலகிற்கு ஒளிவீசும் வேளையில் ஈஸ்வரக் கடவுளுக்கு நடைபெறும் நடனங்களுடனான பூசை உற்சவத்தைப் பார்த்து விட்டு உறுதியான மனதுடன் நீலநிற ஆகாயத்தில் உனது பயணத்தைத் தொடரவும் என்பது மற்றைய பாடலின் தமிழாக்கமாகும்.

**வளரும்..**



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டு ஆரையம்பதியில் "மட்டக்களப்பு ரவுடி வாள் வெட்டு குழு"வைச் சேர்ந்த இருவர் ஆயுதங்களுடன் கைது

கனகராசா சரவணன்

மட்டு ஆரையம்பதி வம்மிக்கேணி மாரியம்மன் கோவில் முன்றலில் கடந்த மாதம் "மட்டக்களப்பு ரவுடி வாள் வெட்டு குழு"வினரின் வாள்வெட்டு தாக்குதலில் 3 பேர் படுகாயமடைந்த சம்பவம் தொடர்பாக தலைமறை வாகியிருந்து வந்த 26 வயதுடைய அலியாஸ் மாச்சி என்றழைக்கப்படும் மதுஷன் மற்றும் 19 வயதுடைய இளைஞன் ஒருவர் உட்பட இருவரை 8ம் திகதி புதன்கிழமை இரவு வாள்களுடன் கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

அது பற்றி தெரியவருவதாவது, ஆரையம்பதி செல்வநகர் பகுதியைச் சேர்ந்த விஜயரியன் தலைமையில் மட்டக்களப்பு ரவுடி குழு என்ற பெயரில் இயங்கிவரும் வாள்வெட்டுக்குழு கடந்த மாதம் 29 ம் திகதி வம்மிக்கேணி மாரியம்மன் ஆலய முன்றலில் மக்கள் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டதில் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் தாக்குதல் நடாத்திய "மட்டக்களப்பு ரவுடி வாள்வெட்டுக் குழு"வினர் தப்பி ஓடி தலைமறைவாகினர்.

இந்த நிலை தலைமறைவாகி வந்த வாள்வெட்டுக் குழுவை பொலிசார் தேடிவந்துள்ள நிலையில் பொலிசாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினை யடுத்து சம்பவ தினமான புதன்கிழமை இரவு காத்தான்குடி பொலிஸ் நிலைய போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தவராஜா ரஜீவ்காந்தன் தலைமையிலான குழுவினர் வாள்வெட்டுக் குழுவினர் தலைமறைவாகியிருந்த வீட்டை சுற்றிவளைத்து இருவரை மடக்கிபிடித்து கைது செய்ததுடன் 3 வாள்களை மீட்டனர்.



இதில் கைது செய்யப்பட்டவர் மட்டக்களப்பு ரவுடி வாள் வெட்டு குழுவைச் சேர்ந்த 26 வயதுடைய அலியாஸ் மாச்சி என்றழைக்கப்படும் செல்வநகரைச் சேர்ந்த மதுஷன், மற்றும் செல்வநகரைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞன் எனவும் இந்த வாள்வெட்டு குழுவினர் இந்த பகுதியில் மோட்டார் சைக்கிளில் வாளுகளுடன் வலம் வந்து பொது மக்களை அச்சுறுத்தி வந்துள்ளதுடன் போதை பொருள் கடத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் பலர் மீது வாள்வெட்டு தாக்குதல்கள் மேற் கொண்டு வந்துள்ளனர் எனவும்.

கடந்த 2025ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் ஆரையம்பதி மகாவித்தியாலய மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் மீது வாள்வெட்டு தாக்குதல் நடாத்திவிட்டு தப்பி ஓடியுள்ளதாகவும் இந்து குழுவில் அந்த பகுதியைச் சோந்த 15 தொடக்கம் 28 வயது வரையிலான 10 க்கு மேற்பட்டவர்கள் இவ்வாறு செயற்பட்டுவருவதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

சினிமா

# தனுஷின் "ஓம்" படத்தில் பாலிவுட் நடிகர் நஸ்ருதீன் ஷா இணைந்தார்

தனுஷின் "ஓம்" படத்தில் பாலிவுட் நடிகர் நஸ்ருதீன் ஷா இணைந்தார். தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவரான தனுஷ், வித்தியாசமான கதைக்களங்களைத் தேர்வு செய்து தொடர்ந்து ரசிகர்களை கவர்ந்து வருகிறார்.

சமீபத்தில் இயக்குநர் விக்னேஷ் ராஜா இயக்கத்தில் வெளியான "கர" திரைப்படத்தில் நடித்திருந்தார். இந்தப் படம் ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தாலும், வெளியான பிறகு கலவையான விமர்சனங்களை பெற்றது. "கர" படத்தைத் தொடர்ந்து, "அமரன்" திரைப்படத்தின் இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி இயக்கும் புதிய படத்தில் தனுஷ் நடித்து வருகிறார். வுண்டர்பார் பிலிம்ஸ் மற்றும் ஆடேக்ஸ் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்து வரும் இந்தப் படம், இதுவரை "தனுஷ் 55" என்ற தற்காலிக பெயரில் அழைக்கப்பட்டு வந்தது.

ஆக்ஷன் கதைக்களத்தில் உருவாகி வரும் இந்தப் படத்தில் ஸ்ரீலீலா, சாய் பல்லவி ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கின்றனர். மேலும், மலையாள திரையுலகின் முன்னணி நடிகர் மம்முட்டி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். குறிப்பாக, சாய் பல்லவி காவல்துறை அதிகாரி கதாபாத்திரத்தில் நடிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. படத்தின் தலைப்பை படக்குழு அதிகாரப்பூர்வமாக சமீபத்தில் அறிவித்தது. அதன்படி, "தனுஷ் 55" திரைப்படத்திற்கு "ஓம்" என்ற தலைப்பு வைக்கப்பட்டது. மேலும், "ஓம்" திரைப்படம் வருகிற அக்டோபர் 16-ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் என்றும் படக்குழு அறிவித்துள்ளது. தலைப்பு அறிவிப்புடன் வெளியாகியுள்ள பதாகை ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று, சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



பத்ம பூஷண் விருது வென்ற நடிகர் மம்முட்டிக்கு வாழ்த்து தெரிவித்து தனுஷின் "ஓம்" படத்தில் அவரது தோற்றத்திற்கான சிறப்பு பதாகையை படக்குழு வெளியிட்டுள்ளது. "ஓம்" படத்தின் படப்பிடிப்பில் நடிகர் மம்முட்டி கேக் வெட்ட, நடிகர் தனுஷ் மற்றும் இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி கைதட்டி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். மலையாள சினிமா மட்டுமல்லாது இந்தியளவில் மிகச்சிறந்த நடிகர் எனப் பெயரெடுத்த மம்முட்டியின் கலை பங்களிப்புக்காக மத்திய அரசின் பத்ம பூஷண் விருதை அதிபர் திரௌபதி முர்முவிடமிருந்து பெற்றுக்கொண்டார். மம்முட்டிக்கு இந்த விருது கிடைத்தது திரைத்துறையினரிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், தனுஷின் "ஓம்" படத்தில் பாலிவுட் நடிகர் நஸ்ருதீன் ஷா இணைந்துள்ளதை படக்குழு பதாகை வெளியிட்டு அறிவித்துள்ளது.

# மிஷ்கின் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடிக்கும் "டிரெயின்" படத்தின் முன்னோட்டம் ஜூலை 12ம் தேதி வெளியாகிறது



மிஷ்கின் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடிக்கும் "டிரெயின்" படத்தின் முன்னோட்டம் ஜூலை 12ம் தேதி வெளியாகிறது. தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான விஜய் சேதுபதி நடிப்பில் உருவாகியுள்ள "டிரெயின்" திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இயக்குநர் மிஷ்கின் இயக்கியுள்ள இந்த படத்தில் நடிகை சுருதி ஹாசன், கே.எஸ். ரவிக்குமார், கலையரசன் மற்றும் நடிகர் நரேன் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். கலைப்புலி எஸ். தாணுவின் வி கிரியேஷன்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இந்த படத்திற்கு இயக்குநர் மிஷ்கினே இசையமைத்திருப்பது கூடுதல் சிறப்பாக பார்க்கப்படுகிறது. "டிரெயின்" திரைப்படம், ஒரே இரவில் ரெயிலில் நடைபெறும் மர்ம சம்பவங்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள டார்க் திரில்லர் படமாகும். விறுவிறுப்பான திரைக்கதையுடன் உருவாகியுள்ள இப்படத்தின் படப்பிடிப்பு ஏற்கனவே நிறைவடைந்துள்ளது.

"டிரெயின்" படத்தின் முதல் பாடலான "கன்னக்குழிக்காரா" வெளியானது. மிஸ்கின் இசையில் கபிலனின் வரிகளில் சுருதி ஹாசன் இப்பாடலை பாடியுள்ளார். இந்த நிலையில், "டிரெயின்" திரைப்படத்தின் முன்னோட்டம் மற்றும் இசை வெளியீடு குறித்த அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. வரும் 12 ஆம் தேதி மாலை திரைப்படத்தின் முன்னோட்டம் மற்றும் இசை வெளியீடு, சென்னை பிவிஆர் சத்யம் திரையரங்கில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# விக்ரம் பிரபுவின் 26— வது படத்தின் பதாகை வெளியாகியது

விக்ரம் பிரபுவின் 26-வது படத்தின் பதாகை வெளியாகியது. "டாணாக்காரன்", "சிறை" போன்ற ஆழமான கதைக் களங்களைத் தேர்ந்தெடுத்து நடித்து வரும் நடிகர் விக்ரம் பிரபு, தனது அடுத்த பிரம்மாண்ட படத்திற்கு தயாராகிவிட்டார்.

அவரது திரைப்பயணத்தில் 26-வது திரைப்படமாக உருவாகும் புதிய படத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு மற்றும் முதல்காட்சி பதாகை வெளியாகி ரசிகர்களிடையே பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ரோமியோ பிக்சர்ஸ் நிறுவனத்தின் சார்பில் ராகுல் தயாரிக்கும் இத்திரைப்படத்தை, அறிமுக இயக்குநர் சித்தார்த் எழுதி இயக்குகிறார்.

அண்மையில் வெளியான இப்படத்தின் முதல்காட்சி பதாகை ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. ஒரு மரப்பலகையின் மீது தங்கக் கட்டி உருகி ஓடுவது போன்றும், அதன் மீது ரத்தக் கறையுடன் கூடிய காலடித் தடங்கள் இருப்பது போன்றும் அந்தப் பதாகை மிரட்டலாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்படத்திற்குப் பலமாக "யங் மேஸ்ட்ரோ" யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார்.

"சத்ரியன்" (2017) திரைப்படத்திற்குப் பிறகு விக்ரம் பிரபு - யுவன் சங்கர் ராஜா இருவரும் இணையும் இரண்டாவது கூட்டணி இது என்பதால், படத்தின் பாடல்கள் மற்றும் பின்னணி இசை மீது ரசிகர்களிடம் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

மேலும், இப்படத்திற்கு கார்த்திக் ஷராஜ் ஒளிப்பதிவையும், அருள் மோசஸ் படத்தொகுப்பையும் கவனிக்கின்றனர். முழுக்க முழுக்க கமர்ஷியல் மற்றும் அதிரடி அம்சங்களுடன் உருவாகவிருக்கும் இந்த ஆக்ஷன் த்ரில்லர் படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு, வரும் செப்டம்பர் மாதத்தில் முழுவீச்சில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



# MORTGAGE

## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

# NESAN

# 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8




இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524




29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்




உதயம் 1579 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 10, 2026

# கனடா "பொற்சதங்கை கலைக்கூடம்" நடன ஆசிரியை பொன்மதி பத்மவரதனின் மாணவி அபர்ணா உதயகுமாரின் பரதநாட்டிய அரங்கேற்றம் சபையோரால் பாராட்டப்பெற்றது



கனடா "பொற்சதங்கை கலைக்கூடம்" நடனப் பள்ளி ஆசிரியை பொன்மதி பத்மவரதனின் மாணவி அபர்ணா உதயகுமாரின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று மிசிசாகா நகரில் உள்ள "மெடோவேல் தியேட்டர் மண்டபத்தில் நடைபெற்றபோது. குருவின் அர்ப்பணிப்பான கற்பித்தல் திறன் மற்றும் மாணவி அபர்ணா. பரதக் கலையின் மீது காட்டிய சிரத்தை மற்றும் ஆர்வம் ஆகியவற்றால் சிறந்த ஒரு விழாவாக நன்கு ரசிக்கப்பெற்றும் சபையோரின் பாராட்டுக்களைப் பெற்றும் ஒரு பேசப்படும் அரங்கேற்ற விழாவாக பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. (தொடர்ச்சி 9ம் பக்கம்)



# கனடா – நாட்டிய கலாஷேஸ்த்திரா நடனப் பள்ளி மாணவி சபரீணா தயானந்தாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற்றது

கனடா-நாட்டிய கலாசேஸ்த்திரா நடனப் பள்ளியின் நிறுவனரும் குருவுமாகிய ஸ்ரீமதி தேனுஜா திருமாறன் அவர்களின் மாணவி சபரீணா தயானந்தாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த 05-07-2026 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்காபுறோ சீனக்கலாச்சார மண்பத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அரங்கேற்றத்தின் தொகுப்பாளர்களாக ரமணன் சந்திரசேகரமூர்த்தி அவர்கள் செல்வி திருநேற்றா சபேசனும் பணியாற்றினார்கள்.

கனடாவின் புகழ்பெற்ற அணிசேர் கலைஞர்கள் வாய்ப்பாட்டு-மிருதங்கம். வயலின். புல்லாங்குழல் ஆகிய முக்கியத்துவம் வாய்ந்த இசைப்பிரிவுகளில் தங்கள் ஆற்றலை இசை வடிவங்கள் ஊடாக நேர்த்தியாக வழங்கவும் நாட்டியச் செல்வி சபரீணாவின் குரு தேனுஜா திருமாறன் அவர்களின் அர்ப்பணிப்புள்ள நட்டுவாங்கத்தோடு இணைந்து அரங்கேற்றம் நேர்த்தியாக நகர்ந்து சென்றது.

# இசையாசிரியர் நியுயோர்க் ராஜா அவர்களின் "சரிகா" இசைக் கல்வி நிலையத்தின் 25வது ஆண்டு வெள்ளி விழாக் கொண்டாட்டம்!

கனடாவில் நன்கு அறியப்பெற்ற இசையாசிரியர் நியுயோர்க் ராஜா அவர்களின் "சரிகா" இசைக் கல்வி நிலையத்தின் 25வது ஆண்டு வெள்ளி விழாக் கொண்டாட்டம் கடந்த யூன் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நோர்த் யோர் நகரில் உள்ள கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. அன்றை அரை நாள்விழா இந்த கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்தவதில் இசையாசிரியர் நியுயோர்க் ராஜா அவர்களின் குடும்பத்தினரும் பெற்றோரும் மாணவ மணிகளும் அத்துடன் இசைக் கலைஞர்கள்- வர்த்தக அன்பர்கள்- ஊடக நிறுவனங்களைச் சார்ந்தவர்கள்- பத்திரிகை ஆசிரியர்கள் பாடக பாடகிகள் என அனைத்துத் தரப்பினரும் தங்களை அர்ப்பணித்து விழாவை வெற்றிகரமான நடத்துவதற்கு பக்கபலமாக விளங்கினார்கள் என்பதை அங்கு அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (தொடர்ச்சி 11ம் பக்கம்)






# கனடாவில் நன்கு அறியப்பெற்ற பன்முகக் கலைஞர் மற்றும் ஒலிபரப்பாளர் பி. எஸ். சுதாகரன் TOYOTA வாகன விற்பனைத்துறையில் கால் பதித்துள்ளார்!

கனடாவில் நன்கு அறியப்பெற்ற திரைப்படத்துறை மற்றும் பன்முகக் கலைஞர், ஒலிபரப்பாளர் பி. எஸ். சுதாகரன் தற்போது வாகன விற்பனைத்துறையில் கால் பதித்துள்ளார்!

ஏற்கெனவே தனது கலைத்துறை மற்றும் ஒலிபரப்புத்துறை ஆகியவற்றில் நாட்டத்துடன் தனது பங்களிப்புக்களை வழங்கி வந்தாலும், சிறு வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த பி. எஸ். சுதாகரன் அவர்கள் தற்போது பல் தேசிய வாகன விற்பனை நிறுவனமான **BRIMELL TOYOTA** வில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

ஸ்காபுறோ நகரில் 5060 **Sheppard Ave E, Scarborough ON M1S** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **BRIMELL TOYOTA** வாகன விற்பனை நிறுவனத்தில் முழு நேரமாகப் பணியாற்றத் தொடங்கியுள்ள இவருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்போமாக!

பி. எஸ். சுதாகரன் அவர்களை வாழ்த்த விரும்புவோர் 416 292 0033 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

# கனடாவில் ஸ்ரோவில் நகரத்தில் இயங்கும் 'Stouffville Golden Years Club' என்னும் "தமிழ் மூத்தோர் அமைப்பின்" கோடைகால ஒன்றுகூடல்




கனடாவில் ஸ்ரோவில் நகரத்தில் இயங்கும் **'Stouffville Golden Years Club'** என்னும் "தமிழ் மூத்தோர் அமைப்பின்" கோடைகால ஒன்றுகூடல் கடந்த 4ம் திகதி சனிக்கிழமையன்று காலை தொடக்கம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்று காலை தொடக்கம் மதியம் வரை நடைபெற்றது. அமைப்பின் தலைவர் தேவா அவர்கள் மற்றும் மார்க்கம் தமிழ் மூத்தோர் அமைப்பின் தலைவர் சுந்தரலிங்கம் அவர்கள் உட்பட பல அமைப்புக்களின் பிரதிநிதிகள் அங்கு கலந்து சிறப்பித்தனர்.

அத்துடன் பொழுது போக்கு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு உணவுண்டு உரையாடி மகிழ்ந்தனர். இங்கு காணப்படும் படம் ஒன்றுகூடியவர்களில் சிலர் இணைந்து நிற்க எடுக்கப்பெற்றதாகும்.